Registered as a Newspaper

இதயன்

சுடர் : 36
கதிர் : 353

வெள்ளிக்கிழமை

கார்த்திகை 03 ஆம் நாள்
19 நவம்பர் 2021

வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை: 30

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

பொருள்களின் விலை உயர்வுக்கு ஏப்ரலில்தான் தீர்வு

இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19
2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாத மளவில்தான் பொருள்களுக் கான விலைப்பிரச்சினை தீர்க் கப்படும் என்று இரா ஜாங்க அமைச்சர் 15

யாழ்ப்பாணத்தில் மீள அதிகரிக்கிறது கொரோனா!

ஒன்றுகூடுவதைத் தவிருங்கள் மாவட்டச் செயலர் அபாய அறிவிப்பு



யாழ்ப்பாணம், நவம்பர் 19

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமை மீண்டும் அதிகரித்துச் செல்கிறது. எனவே, பயணங்கள் மற்றும் இதர செயற் பாடுகளின்போது ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக்கொள் ளுங்கள் என்று யாழ்ப்பாண மாவட்டச்செயலர் க.மகே சன் அபாய அறிவிப்பு விடுத்தார். 15

மாவீரர்களை நினைவேந்துவதற்கு வவுனியாவில் எண்மருக்குத் தடை

வவுனியா, நவ. 19
மாவீரர்தினத்தை கடைப்பிடிக்க வவுனியா நீதிமன் றம் 8 பேருக்கு தடை உத்தரவு விதித்துள்ளது. தமது 14

ஆயர்களின் அறிவிப்பை மீளப்பெறுமாறு 'பொ – பொ' இயக்கம் நேரில் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 19
ஆயர்கள் பேரவையால் அறிவிக்கப்பட்டிருந்த, 'போரில் இறந்தோ ருக்கான நினைவு கூரல்' தொடர்பான கடந்த 20ஆம் திகதி அழைப்பை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு, 15

முச்சந்தி முரளி



"கார்த்திகை விளக்கீட்டுக்கும் மாவீரர் நாள் தீபத்துக்கும் உவைக்கு வித்தியாசம் தெரியேலை பாருங்கோ..."



கார்த்திகை விளக்கீட்டுக்கும் யாழ்.பல்கலையில் கடும்பிடி!

எதிர்ப்புக்களையும் மீறி தீபமேற்றினர் மாணவர்கள்

யாழ்ப்பாணம், நவ. 19
கார்த்திகை விளக்கீட்டை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் பல் வேறு தடைகளையும் தாண்டி நேற்று நடத்தினர். யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட, கலைப்பீட, வர்த்தக பீடமாணவர்கள் இணைந்து பரமேஸ்வரன் கோவிலில் 15

தொற்று 737 சாவு 15

கொழும்பு, நவ. 19
இலங்கையில் நேற்று 737 பேர் கொரோனாத் தொற்று டன் அடை 15

குடும்பஸ்தருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், நவ. 19
சுன்னாகம், அம்பனைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மீது நேற்று வாள் 15



கார்த்திகை மலரோடு தீபமேற்றல்!

வவுனியா, நவ. 19
வவுனியாவில் கார்த்திகை விளக்கீடான நேற்று, சில 15

தாதியர்களுக்கு பதவியுயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கவும்

வடக்கு ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், நவ. 19
வடக்கு மாகாணத்தில் சிரேஷ்ட தர தாதியர்களின் முறையான பதவி 15

வலுவான ஆன்மீகத் தலைவர் இந்து மதத்துக்குத் தேவை!

யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ. 19
இந்து மதத்தில் வலுவான ஆன் மீகத் தலைவரை காணக்கிடைக் கவில்லை. நல்லூர் ஆதீனம் என்கின்றோம், சின்மய மிஷன் என்கின்றோம், தென்கயிலை ஆதீனம் என்கிறோம் ஆனால், ஒரு வலு 15



இந்துக்களின் கார்த்திகை விளக்கீடான நேற்று, இந்துக்கள் மட்டுமன்றி, ஏனைய மதத்தினரும் தத்தம் வீடுகளில் விளக்கேற்றி மகிழ்வுடன் கொண்டாடினர். (கு)



திருமணத்துக்குச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகி இளைஞர் சாவு!

வவுனியாவிலிருந்து சென்ற ஜவர் படுகாயம்

வவுனியா, நவ. 19
பதிவுத் திருமண நிகழ்வுக்காக வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டி ருந்த வாகனம் விபத்துக்குள்ளாகியதில், 15

இனவாத, மதவாதக் குழுக்களால் நாட்டுக்குப் பெரும் ஆபத்துநிலை!

கொழும்பு, நவ. 19

இலங்கையில் இன மற்றும் மதவாதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், அந்தச் செயற்பாடுகளில் ஈடுபடும் குழுக்களால் நாட்டுக்குப் மிகப்பெரிய ஆபத்து ஏற்படலாம் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய எச்சரித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் மிகவும் தீவிரமான இனவாத, மதவாதச் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் சிங்கள, தமிழ், முஸ்லிம்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படலாம்.

இது தொடர்பில் பொலிஸார் அவதானம் செலுத்த வேண்டும். தேசிய ஐக்கியம் மிக முக்கியம். இனவாத, மதவாத மற்றும் ஏகாதிபத்தியவாதம் காணப்படும் நாட்டுக்கு எதிர்காலம் என்ற ஒன்று இல்லை. இது நாம் எதிர்காலச்சந்ததிக்கு செய்யும் மிகப்பெரிய துரோகமாகும்.

இந்த நாட்டில் ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பில் பேசப்படுகின்றது. எனினும் அது இடம்பெறுவதாகத் தெரியவில்லை. அதிகாரம் படைத்தவர்களுக்கு ஒரு சட்டமும், அதிகாரத்தில் இல்லாதவர்களுக்கு ஒரு சட்டமும் நாட்டில் செயற்படுவதையே நாம் அவதானிக்கின்றோம். இந்த விடயத்தை நிரூபிக்கும் வகையில் கடந்த நாள்களில் பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. -என்றார். (ம-4)

வாள்வெட்டில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், நவ.19

பொன்னாலை தெற்குப் பகுதியில், இரண்டு குடும்பஸ்தர்களிடையே ஏற்பட்ட தர்க்கம் வாள்வெட்டில் முடிந்ததால், ஒருவர் காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம் பெற்றது.

சீட்டு பணம் தொடர்பில் ஏற்பட்ட தர்க்கமே வாள்வெட்டில் முடிந்தது என்று பொலிஸார் கூறினர்.

இந்தநிலையில், சம்பந்தப்பட்ட இருவருக்கும் எதிராக முறையிடப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (த-125)

மெய்நிகர் இணையவழி அரங்க கதையாடல்

யாழ்ப்பாணம், நவ.19

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் மெய்நிகர் இணையவழி அரங்க கதையாடல் 48 ஆவது நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் டென்மார்க்கைச் சேர்ந்த அரங்கச் செயற்பாட்டாளர் க.ஆதவன் 'ஈழத்தின் முதல் தெருவெளி நாடகம் திருவிழா' எனும் விடயத்தில் கதையாடவுள்ளார்.

நிறைவுரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இணையவழி அரங்கக் கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் - ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)



மாங்குளத்தில்

91 மில்லி மீற்றர் மழை பதிவானது

யாழ்ப்பாணம், நவ. 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் பகுதியில் 91 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உதயசூரியன் கிராமம், கற்குவாரி 50 வீட்டுத்திட்டம் போன்ற கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து மழைபெய்து வருவதால் அந்தப்பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய நிலையும் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் அதிகபட்சமாக 91 மில்லிமீற்றர் மழைப்பொழிவு பதிவாகியுள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-19)

68 ஆடுகளுடன் பயணித்த வாகனம் மடக்கிப்பிடிப்பு

நாவற்குழியில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.19

அனுமதியின்றி 68 ஆடுகளை ஏற்றிச் சென்ற வாகனம் யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மடக்கிப்பிடிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் அனுமதிப்பத்திர விதிகளை மீறி குறித்த ஆடுகள் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன. சந்தேகநபர் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இருவரும் யாழ்ப்பாணம் முஸ்லிம் தெருப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-20)



சிட்டி, வாழைக்குற்றி அமோக விற்பனை



இந்துமக்களால் கடைப்பிடிக்கப்படும் கார்த்திகைத் தீபத்திருநாளை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் சிட்டி மற்றும் வாழைக் குற்றிகள் நேற்று அமோகமாக விற்பனை செய்யப்பட்டன.

யாழ். குடாநாட்டின் முக்கிய சந்தையான திருநெல்வேலி பொதுச் சந்தையை அண்டியுள்ள பகுதிகளில் சிட்டி வியாபாரம் மும்முரமாக இடம்பெற்றது. இந்தமுறை சிட்டிகள் பல்வேறு வடிவங்களிலும், பல வர்ண நிறங்களிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் புதிதாக வாழைக்குற்றிகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஒரு வாழைக்குற்றி 50 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. (ம-4)

கீரிமலை சிவபூமியில் ஆச்சிரமம் திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்ப்பாணம் கீரிமலையில் அமைக்கப்பட்ட சிவபூமி முதியோர் ஆச்சிரமம் நேற்றுத் திறக்கப்பட்டது.



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகனின் முயற்சியின் பயனாக சிவபூமி அறக்கட்டளையால் இந்த முதியோர் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் நல்லூர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆன்மிகச்சுடர் ரிசி தொண்டுநாத சுவாமிகள், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா, யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-4-20)

பேருந்துச்சேவை ஒழுங்கில்லை
பாடசாலை மாணவர்கள் சிரமம்

முல்லைத்தீவு, நவ. 19

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துச் சேவை ஒழுங்கின்மை காரணமாக பாடசாலை மாணவர்கள் போக்குவரத்தில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

காலை 6.40 மணிக்கு மாந்தை கிழக்கின் பனங்காமம் சந்தியில் இருந்து பயணிக்கும் பேருந்து, பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், செல்வபுரம் பாடசாலை, குமரசாமி வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுடன் மல்லாவி நோக்கிப் பயணிக்கும் பஸ் மாணவர்களை ஏற்றி, மீண்டும் மாந்தை கிழக்குக்குப் பயணிப்பதில்லை. பெற்றோரே பாடசாலை முடிந்தவுடன் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்குச் சென்று அழைத்து வர வேண்டும்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து சங்கத் தலைவர் நாகராசா சற்குணராஜாவிடம் கேட்டபோது, மாணவர்கள் வீடு திரும்புவதற்கும் தனியார் பேருந்துச் சேவையை நடத்த வேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளரினாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை சகல பாடசாலை மாணவர்களுக்குமாக குறித்த பேருந்துச் சேவையை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்- என்றார். (ம-4,13)

நாவலர் சிலை திறப்பு





யாழ்ப்பாணம்,நவ.19

ஆறுமுக நாவலரின் 200 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, நல்லூர் நாவலர் கலாசார மண்டப முன்றிலில் அமைக்கப்பட்ட நாவலர் சிலை நேற்றுத் திறக்கப்பட்டது.

நாவலர் நினைவு தினத்தை முன்னிட்டு, அகில இலங்கை சைவ மகா சபையால் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், அதன் முதலாவது நிகழ்வாக நாவலர் பெருமானுடைய சிலை அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் இறைவணக்கத்தோடு நந்திக் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் நாவலர் சிலையை திரைநீக்கம் செய்தார். தொடர்ந்து அகில இலங்கை சைவ மகா சபையின் தலைவர் சண்முகரத்தினம், நாவலர் பெருமானுடைய சிலைக்கு மலர்மாலை அணிவித்தார். இந்தச் சிலையை சிவசிற்ப வாரிதி உ .கயேந்திரன் வடிவமைத்துள்ளார்.

நிகழ்வில் மாநகர பிரதி ஆணையாளர், இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலாளர், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், தவத்திரு ஆதீன குரு முதல்வர்கள், தியாகி அறக்கொடை நிறுவுநர், அகில இலங்கை சைவ மகாசபையின் துணைப் பொதுச் செயலாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப்பீட பேராசிரியர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ம-4)

“சுசுகாதார முறைப்படியே மாணவனை அனுப்பினேன்”

அதிபர் விளக்கம்

“அராலியில் உள்ள பாடசாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில், உதயனின் ‘புதினம் தெரியுமோ?’ பகுதியில் நேற்று வெளிவந்திருந்தது.

இது தொடர்பில் அந்தப் பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ள விளக்கம் வருமாறு. மாணவன் பாடசாலைக்குள் வந்து நேராக வகுப்பறைக்குச் சென்றார். வகுப்பாசிரியர் ஏன் வகுப்புக்குச் சமூகமளிக்கவில்லை என்று கேள்வியெழுப்பினார். மாணவன் காய்ச்சல் காரணமாக வகுப்புக்குச் சமுகமளிக்கவில்லை என்று தெரிவித்திருந்தார். அதனால் மாணவனை வகுப்பாசிரியர் என்னிடம் அனுப்பினார். காய்ச்சல் காரணமாக பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை அதனால் வகுப்பாசிரியர் உங்களைச் சந்திக்கச் சொன்னார் என்று மாணவன் என்னிடம் கூறினான். காய்ச்சலுடன் மாணவன் வந்ததால், சுகாதார விதிமுறைப்படி அவரை வீடு செல்லுமாறு கூறினேன்.

பாடசாலையில் காய்ச்சல் பார்க்கும் இலத்திரனியில் உபகரணம் செயற்பாட்டில்தான் உள்ளது. குறித்த மாணவனின் தந்தை பாடசாலைக்குள் வந்து என்னுடனும், வகுப்பாசிரியருடனும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். தன்னிடம் பணம் இருக்கின்றது. தான் நினைத்தால் வேறு பாடசாலையில் சேர்க்க கூடிய வசதி இருக்கின்றது என்று அவர் தெரிவித்திருந்தார். அப்படியாயின் கடிதம் ஒன்றை தந்து விடுதலைப்பத்திரத்தைப் பெறுமாறு நான் கூறினேன்” என்று அதிபர் விளக்கமளித்துள்ளார்.



வடக்கு மாகாண எலக்சனில கூட்டமைப்பு சார்பில நிக்கப்போற முதலமைச்சர் வேட்பாளர் ஆர் எண்டு ஒரு சஸ்பென்ஸ் போட்டனாங்களெல்லோ. எங்கட சனத்துக்கு ஒருநாள்கூட பொறுக்க முடியேல. ஒரே போன்கோல். சரி இனியும் சஸ்பென்ஸ உடைக்காமல் விட்டால் இந்தப் போன் தொல்லை தாங்கேலாமல் போயிடும். அதால இன்டைக்கு அதைச் சொல்லுவம்.

இந்தமுறை வடக்கு மாகாண எலக்சனைப் பாவிச்சு தமிழரசுக் கட்சியைத் தன்ர கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டுவர சட்டாம்பியார் பிளான் பண்ணுறார். அதுக்காக இந்தமுறை ‘இளம் ஆக்களுக்குத்தான் மாகாண சபை எலக்சனுக்கு வாய்ப்பு’ எண்ட கோசத்த அவர் கட்சிக்குள்ள முன்வைக்கத் தொடங்கிட்டார். அதுக்குக் காரணமிருக்கு. இந்தமுறை பார்லிமன்ட் எலக்சன் காலத்தில தனக்கு வேலைசெய்த இளம் ஆக்கள் எல்லாருக்கும், ‘மாகாண சபை சீற் தாறன்’ எண்டு ஆசைகாட்டித்தான் அவையத் தன்ர பக்கத்தவிட்டுப் போகாமல் சட்டாம்பியார் வைச்சிருந்தவர். கிட்டத்தட்ட பத்துப் பதினைஞ்சு பேருக்கு அப்பிடி வாக்குறுதி குடுத்திருப்பார். எலக்சன் முடிஞ்ச பிறகும் தனக்கு வாக்குக் குறைவா விழுந்த இடங்களில உள்ள இளம் ஆக்களப்போய் சந்திச்சு அவையையும் தன்ர செம்புகளா மாத்திக் கொண்டிருக்கிறார். மாகாண சபை சீற் எண்ட மந்திரத்தைச் சொல்லிகதான அவையளையும் செம்புகளா மாத்திறார்.

இப்பிடிப் பாத்தால் கிட்டத்தட்ட மாகாண சபை எலக்சனில தமிழரசுக் கட்சி சார்பில சட்டாம்பியாரின்ர செம்புகளுக்கு மட்டும்தான் சீற் கிடைக்கும் போல. அப்பிடிக் கிடைச்சிட்டால் பிறகு அவளவு பேரையும் ஒண்டா வைச்சுக்கொண்டு அதைப் பலமாக்காட்டி கட்சியை முழுசாத் தன்ர கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டுவாறதுதான் சட்டாம்பியாரின்ர மாஸ்டர்பிளான். அதுக்குத்தான் முதலமைச்சர் கனவில இருந்த மாவையாருக்கு எம்.பி. சீற் தாறது எண்டுசொல்லி காய்வெட்டுப்பட்டிருக்கு. ஆனால், என்ன பிரச்சினையெண்டால் சட்டாம்பியாரின் செம்புகளில முதலமைச்சர் வேட்பாளருக்குப் பொருத்தமான ஆள் ஒருத்தரும் இல்லை. அதால புதுசா ஒராளை அதுவும் இளம் ஆளை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் சட்டாம்பியாருக்கு. அப்பிடித்தான் ஒரு இறக்குமதி வேட்பாளரோட சட்டாம்பியார் டீல் பேசி இருக்கிறாராம். அந்த வேட்பாளர் வேற ஆருமில்லை. தந்தை செல்வநாயகத்தின்ர பேரன்தானாம். வெளிநாட்டில இருக்கிற அவரை, முதலமைச்சர் வேட்பாளரா இறக்கினால் கட்டாயம் வெல்லுவார் எண்டது சட்டாம்பியாரின்ர கணிப்பு. ஏனென்டால் தந்தை செல்வநாயகத்தின்ர பேருக்கு இருக்கிற மவுசை வைச்சுக்கொண்டு வாக்குகளை பேரன் அள்ளக்கூடும். ஆனாலும், இன்னும் சிலருக்கும் முதலமைச்சர் பதவி தாறன் எண்டு சட்டாம்பியார் வாக்குக் குடுத்திருக்கிறாராம். சிலவேளை நடக்கப்போற மாகாண சபை எலக்சனில கூட்டமைப்பு சார்பில முதலமைச்சர் வேட்பாளரா நாலைஞ்சு பேர் நிண்டாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லை.



- பட்டி

டொலர் தட்டுப்பாடு

நாணய நிதியத்திடம் கடன்பெறத் தயக்கம்

அரசுக்குள் இழுபறி

கொழும்பு, நவ. 19

நாட்டில் அதிகரித்துவரும் டொலர் தட்டுப்பாட்டைச் சரிசெய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப்பெறுவது தொடர்பில் அரசுக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் கடுமையான நெருக்கடிக்கு ஒரே தீர்வு, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனைப் பெறுவதே என அரசாங்க அமைச்சர்கள் குழுவொன்று கருத்துத் தெரிவித்துள்ளது என்றும் இன்னுமோர் அமைச்சர்கள் குழு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது என்றும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியை டொலர் தட்டுப்பாடு கடுமையாகப் பாதித்துள்ள நிலையில், இனியும் காலம் தாழ்த்தாமல் சர்வதேச நாணய நிதியத்தை அணுகுமாறு அமைச்சர்கள் குழு வொன்று பரிந்துரைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் டொலர் நெருக்கடி குறித்து, தீவிரமாகக் கலந்துரையாடப்பட்டதாகவும், எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம் 350 மில்லியன் டொலர் தேவைப்படுவதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு பணம் தேடும் முயற்சி வெற்றியளிக்கவில்லை எனவும் கூட்டுத்தாபன நிலைவரப் படி வரும் பெப்ரவரி மாதத் துக்குப் பின்னர், எண்ணெய்க் கொள்வனவு செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

டொலர் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வதை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட அமைச்சர்கள் பிடிவாதமாக உள்ளனர். சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்றால், நிபந்தனைகளை விதித்து மக்களின் நலன் பறிக்கப்படும் என்று அமைச்சர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

நாணய நிதியத்தை நாடுவது சிறைக்குச் செல்வதற்கு சமம்

வாசுதேவ தெரிவிப்பு



கொழும்பு, நவ. 19

சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது, சிறைக்குச் செல்வதற்கு சமமானது என்று நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசு நாசமாகிப் போனாலும்கூட, ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று மக்களை நாசமாக்க இடமளிக்கமாட்டோம். சர்வதேசச் சந்தையில் விலை உயர்வு காணப்படுகின்ற நிலையிலும், ஏனைய பல சிக்கல்கள் உள்ள நிலையிலும் நாட்டில் விலைவாசி அதிகரிக்கும். இதற்கான தீர்வு எதிர்க்கட்சியிடம் உள்ளதா?

கொரோனாத் தொற்று இல்லையெனில் வேறு விதமாக இந்த வரவு - செலவுத் திட்டம் உருவாகியிருக்கும். நாட்டில் தற்போது வறுமை, வேலையின்மை அதிகரித்துள்ள நிலையில் அவற்றைக் கருத்திற் கொண்டே இறுக்கமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-4)

அரசுக்கும் எமக்கும் முரண்பாடு உள்ளது

அமைச்சர் வீரவன்ச ஒப்புதல்



கொழும்பு, நவ. 19

அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இருப்பதைப்போன்று, அரசுக்கும் எமக்குமிடையே சில கருத்து முரண்பாடுகள் உள்ளன என்று தெரிவித்தார் அமைச்சர் விமல் வீரவன்ச.

வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசுடன் எமக்கு முரண்பாடுகள் உள்ளன. ஆனால் அதற்காக மக்களை நெருக்கடிக்குள் தள்ளநாம்தயாரில்லை. எதிர்க்கட்சியினர் மீண்டும் தம்மிடம் ஆட்சியைக் கொடுக்கவேண்டும் என்கிறார்கள். கடந்த ஆட்சியிலேயே நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கியது. குறிப்பாக இஸ்லாமியப் பயங்கரவாதம் தலைதூக்கியது.

ஜனாதிபதியின் தீர்மானங்கள் நல்ல நோக்கங்களைக் கொண்டாலும், அதில் சில தவறுகள் ஏற்பட்டுள்ளன. அது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தவேண்டும். மக்களை ஒன்றுதிரட்டி, முன்னெடுக்கப்படும் எதிர்க்கட்சியின் போராட்டங்களால் நாடு மீண்டும் கொரோனாத் தொற்றுக்கு உட்படும் - என்றார். (ம)

14 பிக்குகளுக்கு கொரோனா

14 மாணவ பிக்குகளுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று ஆனமடுவ சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

ஆனமடுவ கொட்டுக்கச்சி வடத்த ஸ்ரீ சரணங்கர பிரிவெனாவில் தங்கியிருந்து, கல்வி பயிலும் மாணவ பிக்குகளுக்கே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

பிரிவெனாவில் கடந்த முதலாம் திகதி 18 மாணவ பிக்குகளுக்கும், கடந்த 10 ஆம் திகதி மீண்டும் 13 மாணவ பிக்குகளுக்கும் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் 3 ஆவது தடவையாக அன்டிஜென் பரிசோதனையில் 14 மாணவ பிக்குகளுக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று ஆனமடுவ சுகாதார மருத்துவ அதிகாரி ரவி அபேரத்ன தெரிவித்துள்ளார். (ம-4)

பணிப்பாளர் இல்லாத சிறுநீரக மருத்துவமனை

மைத்திரி சுட்டிக்காட்டு



கொழும்பு,நவ.19

தெற்காசியாவின் மிகப்பெரிய சிறுநீரக மருத்துவமனையான பொலநறுவை மருத்துவமனைக்கு இதுவரை பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை என்று முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார்.

குறித்த மருத்துவமனையின் பல அத்தியாவசியப் பிரிவுகள் மூடப்பட்டுள்ளன. மூன்று மாதங்களுக்குள் மருத்துவமனை அனைத்து சேவைகளுடனும் இயங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி மருத்துவமனையை அங்குராப்பணம் செய்யும்போது, அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

எனினும், எக்ஸ்றே அறைகள், ஆய்வகங்கள், சி.ரி.ஸ்கேன் அறை மற்றும் அறுவைச் சிகிச்சை அலகுகள் இன்று வரை மூடப்பட்டுள்ளன - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

விமல் வீரவன்சவுக்கு இரண்டு முகங்கள்

கொழும்பு, நவ. 19

இரண்டு கடவுச்சீட்டுகள், இரண்டு அடையாள அட்டைகள், இரண்டு முகங்கள் கொண்ட அமைச்சர் ஒருவர் அரசில் உள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

குறித்தநபர் தற்போது அரசிலும், எதிர்க்கட்சியிலும் இருந்துகொண்டு மேலும் இரண்டு முகங்களைக் காட்டி வருகின்றார். இந்த அமைச்சர் வேறு யாருமல்லர் விமல் வீரவன்சவே என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார். (ம-4)

மகன் இறந்து 4 நாள்களில் தாயார் உயிரிழந்த சோகம்

கொழும்பு, நவ. 19

மகன் இறந்து நான்கு நாள்களில் அவரது தாயார் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மாத்தளை பலாபத்வலப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மாரடைப்புக் காரணமாக மகன் இறந்ததை அடுத்து, தாய் திடீரென நோய்வாய்ப்பட்டு நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். தாய் மற்றும் மகனது இறுதிக்கிரியைகள் மாத்தளை வாவன்னாவத்த பொது மயானத்தில் இடம்பெற்றன. (ம-4)

விரைவில் புதிய அரசு

ராஜித தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

அரசில் உள்ள பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேற விருப்பம் தெரிவித்துள்ளனர். விரைவில் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பி, புதிய அரசை உருவாக்குவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சிலர் உடனடியாக எம்முடன் இணைய விரும்பியபோதும், அதற்கு இன்னும் சிறிது காலம் கடக்க வைத்துள்ளோம். எந்த வொரு சக்தியுடனும் இணைந்து இந்த அரசை விரைவில் கவிழ்ப்பதுடன் காலை விடிந்து எழும்பும்போது இரவு அரசு கவிழ்ந்தது என்று செய்திவரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

திறமையற்ற அமைச்சரால் நாட்டு மக்களுக்கே பாதிப்பு

பாலித குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 19

தற்போதைய எரிசக்தி அமைச்சரின் திறமையின்மை மற்றும் தவறான நிர்வாகம் காரணமாகவே சுபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அமைச்சர் உதய கம்மன்பில கடந்த இரண்டு வருடங்களில் இடையக பங்குகளைக் கொள்வனவு செய்து பராமரிக்கத் தவறியுள்ளார்.

தோல்வியடைந்தபோதிலும், தடையற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துவது எனது கடமை என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருந்தார்.

எனினும் தங்களிடம் போதுமான சேமிப்பு வசதிகள் இல்லை என்றும் எரிசக்தி அமைச்சர் கூறியிருந்தார்.

தடையில்லா விநியோகத்தை உறுதிசெய்ய, முதல் மாதத்தில் 2 லட்சத்து 30 ஆயிரம் மெற்றிக்தொன் எண்ணெய் மூன்று கப்பல்கள் மூலம் நாட்டுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

நாளாந்தத் தேவையான 6 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருளை பூர்த்தி செய்வதற்கு 90 ஆயிரம் மெற்றிக் தொன் கொண்ட இரண்டு கப்பல்களை இறக்குவதற்குகூட அமைச்சர் தவறிவிட்டார்.

கடந்த மூன்று மாதங்களில் 3 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் கச்சா எண்ணெயை மாத்திரமே சுத்திகரிக்க எரிசக்தி அமைச்சு உத்தரவிட்டதால், மண்ணெண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்தது.

கச்சா எண்ணெய் விநியோக ஒப்பந்தத்தை எட்டு மாதங்களுக்கு நைஜீரிய நிறுவனத்துக்கு வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரத்தை எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்தார்.

ஜூன் மாதத்தில் இருந்து, நிறுவனம் கச்சா எண்ணெய் இருப்புக்களைக் குறைக்கத் தவறியதால், பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

குறித்த நிறுவனம் பதிவு செய்யப்படவில்லை.

அது ஒருபோதும் நாட்டுக்கு எண்ணெய் விநியோகம் செய்யவில்லை.

ஆனால் அமைச்சர் ஒப்பந்தத்தை வழங்க விருப்பம் தெரிவித்தார்.

வரி செலுத்துவோரின் கடின உழைப்பின்மூலம் சலுகைகளை அனுபவிக்கும் அமைச்சரின் இத்தகைய பொறுப்பற்ற செயல்கள் முழு நாட்டையும் நிச்சய மற்ற நிலைக்கு ஆளாக்கியுள்ளது -என்றார்.

(ம-4)

19,000 சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை

கொழும்பு, நவ. 19

நவம்பர் மாதத்தின் முதல் இரு வாரங்களுக்குள் 19 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவானோர் வருகை தந்துள்ளனர்.

இலங்கையில் பயணத்தடை தளர்த்தப்பட்டுள்ள நிலையில், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படக் கூடும் என்றும் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

(ம-4)

சுற்றுலாத் துறையை மேம்படுத்தத் திட்டம்

கொழும்பு, நவ. 19

கொரோனாத் தொற்றால், கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு, பல சர்வதேசத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சரான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இலங்கையின் சுற்றுலாத் தலங்கள் பற்றி உலகளாவிய நேரடி ஒளிபரப்பு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இணையத்தில் ஆரம்பிக்கப்படும். 130 காணொலிகள் தயாரிக்கப்பட்டு வாரந்தோறும் ஒளிபரப்பாகும் -என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம-4)

இலஞ்சம் பெற முயற்சி: நீதிமன்ற பதிவாளர் கைது

கொழும்பு, நவ. 19

இலஞ்சம் பெற்றுக்கொள்ள முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில், தெல்தெனிய மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்தெனிய பகுதியில் உள்ள அரச வங்கி ஒன்றின் அருகில் இலஞ்சம் பெற முற்பட்ட சந்தர்ப்பத்தில், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை அதிகாரியிடம் 10 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற முற்பட்டார் என்ற குற்றச்சாட்டு அவர்மீது முன்வைக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி ஒருவரின் முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ம-4)

அறிகுறிகள் தென்படின் தனிமைப்படுத்துங்கள்

இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, நவ. 19

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள்தென்படின், தாங்களே தங்களைத் தனிமைப்படுத்த வேண்டும். மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டால் மாத்திரமே தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

குறிப்பாக காய்ச்சல், இருமல் இருக்கும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டில் தனிமைப்படுத்துங்கள். இல்லாவிடில் மாணவர்களின் கல்வி நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது கடினம். அதேவேளை இருமல், காய்ச்சல் இருப்பவர்கள் வேலைக்குச்செல்ல வேண்டாம் -என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-4)

60 மருந்துகளுக்கு சில்லறை விலை

கொழும்பு, நவ. 19

60 அத்தியாவசிய மருந்துகளைச் சேர்ந்த 131 டோஸ்களின் விலைகள் கட்டுப்படுத்தப்பட்டு, அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று மருந்து உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மருந்துகளில் எதனையும் அதிகபட்ச சில்லறை விலைக்குமேல் விற்பனை செய்வது சட்டவிரோதமானது.

ஏதாவது ஓர் இடத்தில் கட்டுப்பாட்டு விலையை மீறி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டால் complaints@nmra.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாக அறிவிக்கமுடியும் என்று அமைச்சின் செயலாளர் மருத்துவர் ஆர்.எம்.எஸ்.கே ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(ம-4)

கொரோனாவால் குழந்தை சாவு!

கொரோனாத் தொற்றால் ஒரு வயதுடைய குழந்தை உயிரிழந்துள்ளது.

கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் தியத்தலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த குழந்தையே, சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

துரித அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று குழந்தைக்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-4)

'போலி லைசன்ஸ்' அச்சிடும் நிலையம் கொழும்பில் முற்றுகையிடப்பட்டது

கொழும்பு, நவ.19

கொழும்பு கொம்பனி வீதியில், இயங்கிவந்த போலிச் சாரதி அனுமதிப்பத்திர நிலையமொன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

27 போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்களும் அவற்றை அச்சிடப் பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் காலாவதியான 41 சாரதி அனுமதிப்பத்திரங்களும் இங்கு மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்குத் தேவையான பிரத்தியேகஸ்ரிக்கர்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. வாகனம் ஓட்டும் பயிற்சி இல்லாதவர்களுக்கும், மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த முடியாதவர்களுக்கும் இங்கு நீண்டகாலமாக சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளது.

இங்கு ஐந்து நிமிடங்களுக்குள் தரகர்கள் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளனர் என்று குற்றப் புலனாய்வுப்பிரிவின் கணினி குற்றப் பிரிவு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

(ம-4)

மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கல்

முல்லைத்தீவு, நவ.19

முல்லைத்தீவு, மாந்தைகிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேசங்களில் பொருண்மியம் நலிந்த பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக 14 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு, விநாயகபுரம் அ.த.க பாடசாலையில் 5 மாணவர்களுக்கும், துணுக்காய் ஐயன்கன் குளம், தென்னியன்குளம், கோட்டை கட்டிய குளம் ஆகிய பாடசாலையில் 9 மாணவர்களுக்கும் இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள், சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர், துணுக்காய் பிரதேசசபையின் உப தவிசாளர் த.சிவகுமார், மாந்தைகிழக்கு பிரதேசசபை உறுப்பினர் சரஸ்வதி, இ.தயாபரன் ஆகியோர் மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கினர். (மு-ரி1,20)

உணவுப் பொருள்கள் வழங்கல்

கிளிநொச்சி, நவ.19

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வண்ணாங்கேணி மற்றும் காஞ்சிபுரம் கிராமத்தில் உள்ள 15 குடும்பங்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

உணவுப் பொருள்களை, வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைத் தவிசாளர் சு.சுரேன் ஆகியோர் நேரடியாகச் சென்று வழங்கினர். (ஒ-ரி-113)

புதுக்குடியிருப்பில் உழவர் சந்தைகள்

சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

முல்லைத்தீவு, நவ.19

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குரிய சந்தைகளில் உழவர் சந்தை அமைய வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் சி.குகநேசனின் பிரேரணை, பிரதேச சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது

உள்ளூர் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திகளுக்கு சந்தைகளில் வியாபாரிகளால் நியாய விலை கொடுத்து கொள்வனவு செய்யப்படாவிடின் விவசாயிகள் அவற்றை பொருத்தமான விலையில் விற்பனை செய்ய ஒவ்வொரு சந்தைகளிலும் உழவர் சந்தை அமைய வேண்டும் என பிரதேசசபை உறுப்பினரின் பிரேரணைக்கே சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதுடன் நுகர்வோர் குறைந்த விலையில்பொருள்களைக் கொள்வனவு செய்யவும் வாய்ப்பாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-13)

உதவி வழங்கல்

முல்லைத்தீவு, நவ.19

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட ஐயங்கன்குளம் கிராமத்தில், மின்னல் தாக்கி உயிரிழந்த மாணவனின் குடும்பத்துக்கு உதவி வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள், ஒரு தொகை நிதி உதவியை குடும்பத்தினரிடம் வழங்கி வைத்தார்.

கடந்த 26 ஆம் திகதி மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த 14 வயதுச் சிறுவனின் குடும்பத்துக்கே இந்த உதவி வழங்கப்பட்டது. (மு-ரி1-20)

புதுக்குடியிருப்பில் அனைத்துப் பகுதிகளிலும் பழவிற்பனைக்கு அனுமதி

முல்லைத்தீவு, நவ.19

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் எல்லைப்பரப்புக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் பழங்களை விற்பனை செய்ய பிரதேசசபை அனுமதிக்க வேண்டுமென பிரதேசசபை உறுப்பினர் செ.பிரேமகாந் விடுத்த கோரிக்கைக்கு பிரதேசசபை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 11ஆம்திகதி புதுக்குடியிருப்புப் பிரதேசசபையில் நடைபெற்ற அமர்வில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகளிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள பகுதிகளிலேயே இதுவரை பழங்கள் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்தக் கட்டுப்பாட்டை நீக்கி நகர்ப்புறங்கள் மற்றும் ஏனைய இடங்களிலும் பிரதேச சபையின் அனுமதியுடன் பழங்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-13)



டெங்கு ஒழிப்பு பரிசோதனை

சாவகச்சேரி, நவ.19

தென்மராட்சிப் பிரதேசத்தில் விசேட டெங்கு ஒழிப்பு பரிசோதனைகள் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி சுகாதாரத்துறை திணைக்களத்தினருடன் பிரதேச செயலகத்தினர், பொலிஸார், உள்ளூராட்சி சபையினர், டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள், கிராமிய டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவினர் ஆகியோர் இணைந்து இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தப் பரிசோதனைகள், எதிர்வரும் 22 ஆம் திகதி சங்கத்தானைப் பிரிவிலும், 24 ஆம் திகதி கொடிகாமம் மத்தி பிரிவிலும், 26 ஆம் திகதி சந்திரபுரம் பிரிவிலும் இடம்பெறவுள்ளன.

இதன்போது, டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நீர் ஏந்து பொருள்கள் காணப்படின் வீட்டின் உரிமையாளர்கள் மற்றும் காணி பராமரிப்பாளர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பரிசோதனையில் குடியிருப்புக்கள், பாடசாலைகள் ஏனைய கல்வி நிறுவனங்கள், அரச திணைக்களக் கட்டடங்கள், தொழிற்சாலைகள், கட்டட நிர்மாணம் மேற்கொள்ளப்படும் இடங்கள், பொது இடங்கள், சமய தலங்கள் ஆகியவற்றில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அறிவித்துள்ளனர். (ஒ-ரி-19)

எரிவாயுவுக்கு தட்டுப்பாடு: விறகுக்கு வந்தது மவுசு

வவுனியா,நவ.19

நாட்டில் எரிவாயுவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து, வவுனியாவில் பலர் விறகு கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிந்துள்ளது.

எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக வெற்று சிலிண்டர்களுடன் மக்கள் அலைந்து திரிவதையும், விறகு வியாபாரிகள் அதிகம் விற்பனையில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

விறகு வியாபாரிகள் தூர இடங்களுக்குச் சென்று விறகுகளை துவிச்சக்கரவண்டிகளிலும், மோட்டார் சைக்கிள்களிலும் ஏற்றிவந்து நகரிலுள்ளவர்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

மக்களும் விறகைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

துவிச்சக்கரவண்டியில் ஆயிரத்து 800 ரூபாவுக்கும், மோட்டார் சைக்கிளில் இரண்டாயிரத்து 500 ரூபாவுக்கும் விறகு விற்பனை செய்யப்படுகின்றது. (ஒ-4,110)

குடிதண்ணீர் திட்டம் மக்கள் பாவனைக்கு

வவுனியா,நவ.19



வவுனியா, தரணிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டம் மக்கள் பாவனைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

தனியார் நிறுவனங்களின் கூட்டிணைவில் உருவாக்கப்பட்ட எல்ஜி கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின்மூலம் கிராமங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது திட்டம் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தில் வசிக்கும் 610 குடும்பங்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வழங்குவதற்காக உயிர் வாழ்வதற்கு 'ஒரு துளி நீர்' என்ற வடிகட்டுதல் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் பி.சரத் சந்திர, வவுனியா பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் திருமதி பிரியதர்சினி சஞ்சீவன், Korea Friends of Hope International Srilanka நிறுவனத்தின் செயலர் லசிந்த நாணயக்கார, தரணிக்குளம் கிராம அலுவலர் அமல ராஜ், ஈச்சங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தரணிக்குளம் சமூர்த்தி அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-4)



பரிசளிப்பு நிகழ்வு

கிளிநொச்சி- சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலையின் 2020ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய முன்னாள் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரும், யாழ்.கல்வி வலய அபிவிருத்தி ஆரம்பப்பிள்ளைப் பருவ உதவிக் கல்விப் பணிப்பாளருமான சி.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி.திலீபன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். (ச-159)

இதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சிறுவர்களில் அவதானம்!

இலங்கையில் மற்றுமொரு கொரோனாப் பேரலை ஏற்படுவதற்கான அனைத்துச் சாத்தியப்பாடுகளும் தென்படுகின்றன. ஆனால், கடந்த கொரோனா அலைகளை விடவும் அடுத்து வரவுள்ள அல்லது வருவதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ள கொரோனா அலை அதிக தீவிரத்தன்மை மிக்கதாக அமையும். காரணம், அதிகளவான சிறுவர்கள் தொற்றாளர்களாக இந்த அலைக்கு ஆட்படுவர்.

நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்றுத் தீவிரமாகி வருகின்றது. சிறுவர்கள் இந்த அலைக்குள் ஆட்படுவது அதிகமாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார் கொழும்பு சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர். அவரின் கருத்துக்களை மெய்ப்பிதம் செய்யும் வகையில்தான் நாடளாவிய ரீதியில் அன்றாடம் பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் தொற்றாளர்களின் வயதுப் பிரிவும் அமைந்துள்ளன என்பதும் வெளிப்படையே.


பாடசாலைகள் மீண்டும் இயங்கு நிலைக்குத் திரும்பியுள்ளன. இதனால் சிறுவர்கள் பொதுவெளியில் தொடர்புபடுவது மிகச் சாதாரணமாகிவிட்டது. பாடசாலைகளுக்குச் செல்லும் சிறுவர்களில் பெருமளவானவர்கள் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறானகாரணிகள், இயல்பாகவே விழிப்புணர்வும் எச்சரிக்கைத் தன்மையும் குறைந்தளவில் உள்ள சிறுவர்கள் பேராபத்தில் விழுவதற்கான அனைத்துச் சாத்தியப்பாடுகளையும் பெரிய அளவில் ஏற்படுத்தியிருக்கின்றன.

இவ்வாறு அதிகளவான சிறுவர்கள் தொற்றுக்கு உட்படும்பட்சத்தில், அது மீண்டுமொரு தடவை பாடசாலைகளை முடக்கிவைக்கும் நிலைக்கும் சென்றுவிடும். அதைத்தவிர இந்தப் பேராபத்தைக் கையாள்வதற்கு வேறு வழியுமில்லை. இதற்கு, ஆகப்பிந்திய எடுத்துக்காட்டாக தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நான்கு பாடசாலைகள்பதுளைமாவட்டத்தில்முழுமையாகவும் பகுதியளவிலும் முடக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம்.

இவை வெறுமனே கொரோனாத் தொற்றைக் கையாள்தல், அதிலிருந்து மீண்டு வருதல் என்பவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் அல்ல. அவற்றைத் தாண்டிய இமாலயப் பிரச்சினை இதில் உள்ளது. நாட்டின் எதிர்கால கல்விச் சமூகத்துடன் தொடர்புபட்ட விடயமிது. நாட்டில் ஏற்பட்ட தொற்றுக்கள் காரணமாகவே முழுமையாகவும் பகுதியளவிலும் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகள் தமது கல்வியை சிறுவர்கள் இழந்துள்ளனர். இவ்வாறிருக்கையில் கல்விச் சமூகத்துக்குள்ளேயே கொரோனா ஊடுருவினால், அது இன்னும் சில ஆண்டுகளுக்குப் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்றால் அதை மறுத்துரைப்பதற்கில்லை.

இணையக்கல்வி, தொலைக்காட்சிக் கல்வி என்று எத்தனையோ திட்டங்களை – 'சப்பைக்கட்டுக்களை' இந்தப் பின்னடைவுக்கான தீர்வுகளாக துறைசார் அதிகாரிகள் முன்வைக்கலாம். ஆனால், அந்தத் திட்டங்கள் மூலமாக இலங்கையின் தார்மீகக் கொள்கையான 'சமத்துவக் கல்வி' அனைத்து மாணவர்களுக்கும் கிடைத்துவிடுமா? அல்லது கிடைத்திருக்கின்றதா? என்று கேட்டால், அதை உறுதிப்படுத்துவதற்கும் – உத்தரவாதம் தருவதற்கும் எவருமில்லை. வறுமைக்குட்பட்ட ஏகப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மாணவர்களுக்கு இன்னும் இந்த இலத்திரனியல் கல்வியென்பது எட்டாக்கனிதான்.

ஆக, நிலைமையைக் கையாள வேண்டிய பெரும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. வெறுமனே அரசை நோக்கிக் கைகாட்டிவிட்டு, நகர்ந்துசெல்லும் விடயமல்ல இது. நாம் ஒவ்வொருவரும் இதில் களத்தில் இறங்க வேண்டியவர்கள். எம் சிறுவர்களுக்கு – குழந்தைகளுக்கு நிலைமையின் பாரதூரத்தை எடுத்துக் கூறி, அவர்களை இந்தப் பெருந்தொற்றுக்கு ஆட்படாமல் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு உள்ளவர்களாக நாம் இருக்கின்றோம். உண்மையில் இதுவும் ஒரு தேசியக்கடமை. மீண்டும் ஒரு கல்விமுடக்கம் ஏற்படாமல் இருக்க வழிவகைகளை ஏற்படுத்துங்கள். ஏனெனில், இணையக் கல்வியை எட்டிப்பிடிக்க முடியாமல் இருக்கும் அதிகஷ்டப் பிரதேச மாணவர்கள் பலர்.



பாடசாலைகள் மீண்டும் முடக்கப்படும் அபாயம்!

ஹேமந்த ஹேரத் எச்சரிக்கைத்தொனி

கொழும்பு, நவ. 19

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வரும்நிலையில், மீண்டும் பாடசாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
இலங்கையில் சிறுவர்கள் மத்தியில்கொரோனாத்தொற்று அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக பாடசாலைகளை மீண்டும் மூடவேண்டியிருக்கும். பெரியவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.
முன்கூட்டியே அறிவித்தைப்போன்று பல மாகாணங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சிறிதுகாலம் கழித்துத் திறக்கப்பட்ட பாடசாலைகளை மூடுவதைத் தான் முதலில் செய்யவேண்டும். கொரோனாத் தொற்றுகளின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவை விட அதிகரித்தால், பயணங்கள் மற்றும் பிற கட்டுப்பாடுகளை இறுக்கமாக்குவதைத் தவிர வேறு வழியில்லை - என்றார். (ம-4)

ஆசிரியர்களுக்கு கொரோனா 4 பாடசாலைகளுக்கு பூட்டு!

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுள்ளை கல்விப் பிரிவைச் சேர்ந்த நான்கு பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து, ஒரு பாடசாலை முழுமையாக மூடப்பட்டுள்ளது. ஏனைய மூன்று பாடசாலைகளில் குறிப்பிட்ட வகுப்புக்களைக் கொண்ட கட்டடத் தொகுதிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்று ஹல்துமுள்ளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அசங்க சம்பத் தெரிவித்துள்ளார்.
கொஸ்கம வித்தியாலயம் முழுமையாகவும், சொரகுன மகா வித்தியாலயத்தில் தரம் 1, தரம் 2, தரம் 11 ஆகிய வகுப்புகளைக் கொண்ட கட்டடத் தொகுதியும், அமிலகம மகா வித்தியாலயத்தில் தரம் 5 வகுப்பைக் கொண்ட கட்டடத் தொகுதியும், இலுக்பெலெஸ்ஸ மகா வித்தியாலயத்தின் தரம் 3 வகுப்பைக் கொண்ட கட்டடத் தொகுதியும் மூடப்பட்டுள்ளன. (ம-4)

எதிர்வரும் மாதங்களில் சிறுவர்கள் அவதானம்!

கொழும்பு, நவ. 19
எதிர்வரும் டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் சிறுவர்களிடையே கொரோனாத் தொற்று மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜி. விஜேசூரிய தெரிவிக்கையில்,
கொரோனாத் தொற்றால் மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சிறுவர்களிடையே கொரோனா பரவுவதைத் தடுக்க பெரியவர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைபிடிப்பது அவசியம் - என்றார். (ம-4)

நவம்பர் 2021

வடமாகாண மரநடுகை மாதம்



"உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களில் பிரதிபலிப்பே."

– மகாத்மா காந்தி

இன்றைய நாள் (ராசிபலன்)

மேடம்: விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். பலர் பாராட்டும் செயல் ஒன்றைச் செய்து பெருமிதம் அடைவீர்கள். எடுத்த விடயம் ஒன்று சிறு தடைகளுக்குப் பிறகு நிறைவேறும்.

இடபம்: வாகனத்தைச் சீரமைப்பீர்கள். மகிழ்விக்கும் செய்தி உண்டு. பணியாளர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். பதற்றமான நிலை மாறும். கோபத்தை கட்டுப்படுத்துவீர்கள். நிம்மதி மீளும்.

மிதுனம்: சகபணியாளர்களுக்கு சிறு தொல்லைகள் நீங்கும். இளைஞர்கள் வாழ்வில் உயர்வதற்கான வழியைத் தேர்ந்தெடுப்பீர்கள். பணியாளர்கள் உழைத்துப் பாராட்டுப் பெறுவீர்கள்.

கடகம்: சம்பள உயர்வு வரும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். உற்ற நண்பர்களுடன் சிறு கருத்து வேற்றுமை ஏற்பட்டுச் சரியாகும். பணியில் இருந்த பிரச்சினை நீங்கும். பொறுப்பை நிறைவேற்றுவீர்கள்.

சிம்மம்: மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். உங்களது பேச்சுக்கு மதிப்பு கூடும். நெருக்கமானவருக்கு நன்மை வரும். உங்களின் செயற்பாடுகள் குடும்பத்தில் குதூகலத்தைத் தரப்போகிறது.

கன்னி: பணியாளர்களுக்கு வாக்கு வன்மை அதிகரிக்கும். பணவரவு தேடி வரும். நீண்டநாளாக இருந்து வந்த மனஅழுத்தம் தீரும். நட்பு வட்டம் விரியும். உங்களது பணியிலும், ஆரோக்கியத்திலும் கவனம் தேவை.

துலாம்: உங்களது கவனக்குறைவால் யாரையும் பகைக்க வேண்டாம். சகோதரர் வீட்டு விசேடங்களில் பங்கேற்பீர்கள். உங்களுக்குப் பாராட்டுக் கிடைக்கும். உங்களுக்குள்ள தனித் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

விருச்சிகம்: பயணம் முடிவாகும். இடமாற்றம், பணி மாற்றம் வரலாம். பணியிடத்தில் உங்களுக்கு மரியாதை அதிகரிக்கும். முயற்சிகை கூடும். உங்களின் புகழ் கூடும். புதிய தொழில் தொடங்கும் திட்டம் நிறைவேறும்.

தனுசு: அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். தாய் வழியில் மகிழ்ச்சி செய்தி கிடைக்கும் பிறருடன் மனம் விட்டுப்பேசி சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். விருந்தில் பங்கேற்பீர்கள்.


மகரம்: விருப்பப்படி விடயங்களை முடிக்கும் பிடிவாதம் உங்களுக்கு வரும். உங்களுக்குத் தொல்லை தந்த எதிரியின் பலம் குறைந்து நிம்மதி வரும். புது விடயத்தில் ஈடுபாடு வரும். தந்தையின் பரிவு கூடும்.

கும்பம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திடீர்ப் பயணம் உண்டாகும். எதிலும் அவசரம், பதற்றம் வேண்டாம். கலகலப்பான நாள். பணவரவு இருக்கும். படிப்படியாக முன்னேற ஆரம்பிப்பீர்கள்.

மீனம்: புதுமனை கட்டிக் குடியேறும் எண்ணம் மேலோங்கும். குடும்ப முன்னேற்றம் கருதி செய்த செலவுக்குப் பலன் உண்டு. காலை நேரத்திலேயே மனம் நிறையும் செய்திகள் வந்து சேரும்.

குருப்பெயர்ச்சி பலன்கள்

2021 -2022



குரு பார்க்க கோடி நன்மை என்று கூறுவார்கள். நவக்கிரகங்களில் சுப கிரகமாக விளங்கும் குரு பகவான் பெயர்ச்சியாகும் பொழுது அனைத்து ராசியினருக்கும் நற்பலன்களை வழங்குவார். குருபகவான் நேர்கதியில் **நவம்பர் 13ஆம் திகதி** மகர ராசியில் இருந்து கும்பராசிக்கு பெயர்ச்சி ஆகியுள்ளார். மகரம், கும்பம், மீனம் ஆகிய ராசிகளில் பயணம் செய்ய இருக்கும் குருபகவான் 2022ஆம் ஆண்டு என்ன செய்ய இருக்கிறார்? அதனால் 12 ராசிக்காரர்களுக்கும் கிடைக்கப் போகும் பலன்கள் என்னென்ன? என்பதைப் பார்ப்போம்.



கலைகளில் ஆர்வமும் காரியத்தில் கருத்தும் கொண்ட துலாராசி அன்பர்களே!

இந்தக் குருப்பெயர்ச்சியில் உங்களின் நான்காம் வீடான மகரத்தில் அமர்ந்து உங்களைச் சங்கடப்படுத்திக்கொண்டிருந்தார் குருபகவான். எந்த சுகங்களையும் அனுபவிக்க முடியாமல் திண்டாடினீர்கள். பலவகைகளிலும் தடைதாமதம் என்று இருந்த நிலை தற்போது மாறப்போகிறது.

13.11.2021 அன்று குருபகவான் உங்களின் பூர்வ புண்ணிய ஸ்தானம் எனப்படும் 5 ஆம் வீட்டுக்கு அடியெடுத்து வைக்க இருக்கிறார். இது வாழ்க்கையை வளமாக்கும் ஒரு பெயர்ச்சி என்றே சொல்ல முடியும்.

குடும்பத்தில் இருந்த குழப்பங்கள், பிரச்சினைகள், சண்டைகள் எல்லாம் இனி முடிவுக்கு வரும். ஊருக்காக ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் ஒருவருக்குள் ஒருவர் அந்நியோன்யமும் அன்பும் இன்றி இருந்த நிலை மாறும். பல காலமாகக் குழந்தை பாக்கியம் இல்லாமல் தவித்த துலாராசி அன்பர்களுக்கு இந்த குருப்பெயர்ச்சிக் காலகட்டத்தில் குழந்தைப் பாக்கியம் உண்டாகும். குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களின் உடல் ஆரோக்கியம் தேறும். செல்லும் இடங்களில் எல்லாம் உங்களுக்கு மரியாதை அமர்க்களப்படும்.

உங்கள் அணுகுமுறையே இனி மாறும். ரசனை அதிகரிக்கும். குலதெய்வத்துக்கு செலுத்த வேண்டிய நேர்த்திக்கடனைச் செய்து மன நிம்மதி பெறுவீர்கல். சொத்துப் பிரச்சினைகள் தீரும்.

குருவின் பார்வை உங்கள் ராசியின் மீதே விழுவதால் உங்களின் தோற்றப்பொலிவு அதிகரிக்கும். 9ஆம் வீடான மிதுனத்தை குருபகவான் பார்ப்பதால் தந்தையுடன் இருந்த கருத்து மோதல்கள் தீரும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. பதவியில் இருப்பவர்களின் அறிமுகமும் அவர்களால் உதவியும் கிடைக்கும். உங்களின் 11ம் வீடான சிம்மத்தை குருபகவான் பார்வையிடுவதால் சகோதர உறவுகளுடன் இருந்த வருத்தங்கள் எல்லாம் நீங்கி மகிழ்ச்சியும் அன்பும் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியமும் மேம்படும். உறக்கம் வராமல் தவித்த துலாராசி அன்பர்கள் இனி நன்கு உறங்குவார்கள். ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கான சந்தர்ப்பங்கள் தேடிவரும்.

13.11.2021 முதல் 30.12.2021 வரை

குருபகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்வதால் பணவரவுக்குக் குறை இருக்காது. பேச்சில் அனுபவம் பளிச்சிடும். இதனால் சகலரின் அன்பையும் பெறுவீர்கள்.

31.12.2021 முதல் 02.03.2022 வரை

சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் சஞ்சாரம் செய்யும் இந்தக் காலகட்டத்தில் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது நல்லது. உணவு விஷயங்களில் கூடுதல் கவனத்தோடு செயற்படுங்கள். உங்களுக்கு சௌரிமானம் ஆகும் உணவுகளை மட்டுமே உண்ணுங்கள். வாழ்க்கைத் துணையோடு மோதல்போக்கைக் கைவிடுங்கள்.

02.03.2022 முதல் 13.04.2022 வரை

குருபகவான் தன் சொந்த நட்சத்திரமான பூரட்டாதி நட்சத்திரத்தில் பயணம் செய்யும் இந்தக் காலகட்டத்தில் தேவையற்ற கவலைகள் ஏற்படலாம். சிலர் தவறான பழக்கங்களுக்கு ஆட்படுவீர்கள். மதிப்பு மிக்க விஷயங்களைக் கையாளும் போது கவனம் தேவை. அலட்சியம் இல்லாமல் பணியாற்ற வேண்டியது அவசியம் என்றாலும் செல்வம் செல்வாக்கு அதிகரித்த வண்ணமே இருக்கும்.

மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி பிரச்சினைகளில் சிக்கி சிதறிக்கிடந்த உங்களைச் சீர்செய்வதுடன் மனமகிழ்ச்சியையும் தருவதாக அமையும்.



அதிகரிக்கும் காற்று மாசு; தினறும் டெல்லி

புதுடில்லி, நவ.19

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் காற்றின் தரம் இது வரை இல்லாத அளவு மிக மோசமான நிலையை அடைந்துள்ளதால் காற்றின் மாசைத் தடுக்க முழு ஊரங்கை அமுல்படுத்திக் கொள்ளுங்கள் என டெல்லி அரசு உத்தரவிட்டுள்ளது. டெல்லி மற்றும் சுற்றியுள்ள பிராந்தியங்களில் தேவையற்ற பயிர்க் கழிவுகளை விவசாயிகள் தீயிட்டுக் கொளுத்துவதாலும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகையாலும் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்துள்ளது எனக் கூறப்படுகிறது. இதையடுத்து டெல்லியில் உள்ள பாடசாலைகள், கல்லூரிகள் ஒரு வாரத்துக்கு மூடப்படுகின்றன எனவும் அரசு ஊழியர்கள் தனியார் நிறுவன ஊழியர்கள் அனைவரையும் வீட்டிலிருந்து பணிபுரிய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நடிகர் சுஷாந்த் சிங்கின் உறவினர்கள் விபத்தில் பலி!

பீஹார், நவ.19



இந்தியாவின் பீஹார் மாநிலத்தின், லகிசராய் மாவட்டத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் அறுவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த அறுவரில் 5 பேர், நடிகர் சுஷாந்த் சிங்கின் உறவினர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. பிப்ரா என்ற கிராமத்துக்கு அருகில் இந்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்ப உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் பங்கேற்று வீடு திரும்பியபோது, அவர்கள் பயணித்த வாகனம் எதிரில் வந்த எரிவாயுக் கொள்கலன்களை ஏற்றிவந்த கனரக வாகனமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. (ச-இ)

கொமர்ஷல் வங்கியால்

யாழ். மருத்துவமனைகளுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.19

கொமர்ஷல் வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதியத்தால் யாழ்.போதனா மருத்துவ மனை, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை மற்றும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை ஆகியவற்றுக்கு அத்தியாவசிய மருத்துவ உபகர ணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

யாழ். போதனா மருத்துவமனைக்கு இரு நவீன சுவாசக் கருவிகள், பலதேவை கண்காணிப்புக் கருவிகள், தெல்லிப்பழை ஆதார மருத்துவம னைக்கு கெராடோ மீற்றர், ஊர்காவற்றுறை மருத் துவமனைக்கு உறைதல் பகுப்பாய்வுக் கருவி, இரத்த வாயு மற்றும் இலக்ரோலைட் பகுப்பாய்வுக் கருவி மற்றும் நவீன சுவாசக் கருவி என்பவை



வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தலைவர் நீதிய ரசர் கே.ஸ்ரீபவன், முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ரெங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கினர். (ச)

மணிவிழா வாழ்த்து



திருமதி சிவனேஸ்வரி திருப்பதி
(SLTS -I)

எமது பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராகக் கடமையாற்றி இன்று 19.11.2021 மணிவிழாக் காணும் ஆசிரியரை உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

சேவைக்காலம்:

வ/ பழையவாடி அ.த.க. பாடசாலை	02.05.1983	31.05.1989
வ/ புளியங்குளம் அ.த.க. பாடசாலை	01.06.1989	31.04.1991
யா/ கச்சாய் அ.த.க. பாடசாலை	01.05.1991	08.09.2009
மே/பிலி/மீலாட் முஸ்லீம் வித்தியாலயம்	09.09.2009	19.01.2015
யா/ விடத்தற்பளை கமலாசினி வித்தி.	20.01.2015	07.07.2019
யா/கச்சாய் மகாவித்தியாலயம்	08.07.2019	18.11.2021

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/ கச்சாய் மகா வித்தியாலயம்

(ce.3614) (2.6)

தென்னங்கன்றுகள் வழங்கி வைப்பு

மன்னார், நவ.19

மன்னார் மாவட்டத்துக்கு தென்னங் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள் ளன. மன்னார் றோட்டரிக் கழக உறுப்பினர்களின் ஏற்பாட்டில், சூரிச் நகரிலுள்ள சிவன் கோவில் அன்பே சிவம் அமைப்பால் 'வரப்புயர மரந டுகை' திட்டத்தின் அடிப்படையில் 500 தென்னங்கன்றுகள் வழங்கப் பட்டன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அடம்பன், மினுக்கன், பாப்பாமோட்டை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு இந்தக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் சி.டி. அரவிந்தராஜ், பயநர்களுக் கான தென்னங்கன்றுகளை வழங் கினார். (ஒ-ரி1,213)



புலம்பெயர்ந்தவரின் நிதியில் குடிதண்ணீர் கிணறு வழங்கல்

கிளிநொச்சி, நவ.19

கிளிநொச்சியில் குடிதண்ணீர்க் கிணறு ஒன்று அமைத் துக் கொடுக்கப்பட்டுள்ளது.

'பூமணி அம்மா' அறக்கட்டளையின் ஏற்பாட்டில், டென் மார்க் நாட்டைச் சேர்ந்தவரால் குடிதண்ணீர்க் கிணறு மற்றும் அந்தப் பகுதியிலுள்ள சிறிய ஆலயத்துக்கு உணவு சமைக்கும் பாத்திரங்களும் வழங்கப்பட்டன.

இதனை, இலங்கைக்கான பூமணிஅம்மா அறக்கட்ட ளையின் தலைவர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் மற்றும் உறுப்பினர்கள் வழங்கினர். (ஒ-ரி1)

பசிபோக்கும் நிலையம் திறந்து வைப்பு



முல்லைத்தீவு, நவ.19

முல்லைத்தீவு, தண்ணீரூற்றில் பசி போக்கும் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமரர் சி.சுபத்திரன் நினைவாக தண்ணீரூற்றில் அமைந்துள்ள சுபத்திரன் இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக் கப்பட்டது.

சுபத்திரனின் பெற்றோரின் நிதிப் பங்களிப் பில் சுபத்திரன் இல் லத்தில் அமைக்கப்பட்ட இந்த நிலையம், முள்ளியவளை ஊற் றங்கரை சித்திவிநாயகர் ஆல யத்தின் பிரதம குருக்களின் ஆசியுடன் திறந்து வைக்கப்பட் டது. (ஒ-ரி1-19)

ஆய்வரங்கம்

சாவகச்சேரி, நவ.19

சைவ சித்தாந்த ஆய்வு நிறு வனத்தினர் நடத்தும் சைவச மய வாழ்வியல் முறைமை களில் இயற்கை மேலாண்மை செயற்றிட்டம் - 2021 எனும் ஆய்வரங்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி சாவகச்சேரி சிவன் கோவில் வீதியிலுள்ள தென்ம ராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் காலை- மாலை நிகழ்வுகளாக நடத்தப்படவுள் ளது.

ஆய்வரங்கில் 10 ஆய்வுக்கட்டு ரைகள் அறிஞர்களால் சமர்ப் பிக்கப்படவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை , கிளிநொச்சி காவேரி கலாமன்றம் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செய லகம் ஆகியவை இணைந்து இந்த ஆய்வரங்கை நடத்த வுள்ளன.

ஆய்வரங்கில் பேராசிரியர் நா.ஞானக்குமரன், வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் திருமதி மனோன் மணி சண்முகதாஸ், கலாநிதி சி.முகுந்தன், விரிவுரையா ளர்களான முனைவர் பொ.சந்தி ரசேகரன், கு.பாலசண்முகன், அ.பௌநந்தி, சி.ரமணராஜா, க.செல்வமனோகரன் , மற்றும் சைவப்புலவர் கு. ரஜீவன் ஆகியோர் ஆய்வுக்கட்டுரை களைச் சமர்ப்பித்து உரையாற்ற வுள்ளனர்.

ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப் படும் ஆய்வுக்கட்டுரைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் நூலாக வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-9)

சுகாதாரப் பொதிகள் கையளிப்பு

கிளிநொச்சி, நவ.19

கிளிநொச்சியில் கொவிட் 19 நிலையங்களுக்கு சுகாதாரப் பொதிகள் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி கிருஷ்ணபுரம், பாரதிபுரம் மற்றும் மாவட்ட பொதுமருத்துவமனையிலுள்ள கொவிட்19 நிலையங்க ளுக்கே இந்த பொதிகள் வழங்கப்பட்டன.

வேள்ட் விசன் நிறுவனத்தின் எக்கோ நிதி அனுசரணை யுடன் கொவிட் 19 க்குரிய 3,100 சுகாதாரப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்தப் பொதிகள், வேள்ட் விஷன் கரைச்சி பிராந்திய அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் சாம்சன் அலெக்சாண் டரால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன. (ஒ-ரி1,13)





வீதி விளக்குகள் பொருத்தல்

கிளிநொச்சி, நவ.19


கிளிநொச்சி, பூநகரி பிரதேசசபை யால் வீதி விளக்குகள் பொருத் தும் வேலைத்திட்டம் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச சபையின் நிதி ஒதுக் கீட்டில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இரவு வேளைகளில் விபத்துக்கள் ஏற் பட வாய்ப்புள்ளது என்று பிரதேச சபைக்கு பொதுமக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் பூநகரி பிரதேச சபையால் முன்னெடுக்கப்படு கிறது. குறித்த திட்டத்தில், வாடியடி நகரம், கொல்லகுறிச்சி, பள்ளிக் குடா, முழங்காவில், குமுழமுனை, கரியாலை, நாகபடுவான், பல்லை வராயன்கட்டு ஆகிய பகுதிகளுக் கான வீதி விளக்குகள் முழுமையாக பொருத்தப்பட்டுள்ளன. (ஒ-ரி1-13)

தற்கால மாணவர்களை பாதிக்கும் சமூக, பொருளாதார காரணிகள்

■ வி.விஜயரூபன்
விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி
மட்டக்களப்பு.

இலங்கைத் திருநாடானது தெற்காசியாவிலே 92 வீதம் என்கின்ற உயர் எழுத்தறிவு வீதத்தினைக் கொண்டு முன்னிலையில் மிளிர்கின்ற தொரு நாடாகும். இது மூன்றாம் உலக நாடொன்றிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதைவிட அதிகமானதாகும். இந்த நிலைமைக்கான அடித்தளம் சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கராவினால் இடப்பட்ட இலவசக்கல்வி முறையைச் சாரும். இன்று இவ்வாறான இலவசக் கல்வியை சிதைப்பதற்கு பல்வேறான முயற்சிகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டாலும் இவை கல்விச் சமூகத்தினரின் எதிர்ப்பால் அவ்வப்போது காணப்படும் அரசுகளால் கைவிடப்படுவதைக் காணலாம்.



சமத்துவமற்ற இணையக்கல்வி

தற்போதைய கொரோனாத் தொற்றுக் காலத்தில், பாடசாலைகளால் நிகழ்த்தப்படும் இணையவழி முறையிலான கற்பித்தல் முறையும் இலவசக் கல்வி என்பதை மறக்கச் செய்யும் செயற்பாடாகவே பார்க்கப்பட வேண்டியதொன்றாக அமைகிறது எனலாம். காரணம் இணையப் பாவனைக்கு மாணவர்கள் செலவழிக்கும் பணத்தைப் பார்க்கும் போது அது தெட்டத் தெளிவாகிறது. உயிரற்ற கருவி மூலமாக உயிரோட்டமான கற்றல், கற்பித்தல் இடம்பெறுகின்றது. ஆனால் இந்த நிலை கல்விச் சமத்துவத் தன்மையினையும் சீரழித்து நிற்பது கண்கூடு.

இவ்வாறாக இன்றைய அசாதாரண நிலையில் பல்வேறான தொழிநுட்பங்களுக்கூடாக கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இது சமத்துவமான கல்வி என்ற கொள்கைக்கு அமைய இடம் பெறுவதென்பது கேள்விக்குறியே. குறிப்பாக கல்வி அமைச்சின் தரவுப் பகுப்பாய்வுகளுக்கு அமைய 60 வீதமான மாணவர்கள் இணையவழிக் கல்வி முறைகளுக்கு இன்னமும் இணைக்கப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றது. அவ்வாறாயின் அந்த மாணவர்கள் சமத்துவமான கல்விக்கு விதி விலக்கானவர்களாக அமைவர். இந்த நிலைமைக்கு மாணவர்களின் பொருளாதார நிலை பெரும் பான்மைக் காரணமாக அமைந்துள்ளது. ஆகவே இவர்களுக்கான மாற்று வேலைத் திட்டங்கள் தற்போது வலயக்கல்வி அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகின்றமை வரவேற்கத்தக்கதாகும்.

இலங்கையின் வறிய மாவட்டங்களில் கல்வியைப் பெறுவதில் வீழ்ச்சிநிலை


இலங்கை அரசு மூலமாக நாடு முழுவதிலுமுள்ள அரச பாடசாலைகளில் ஒரே மாதிரியான கலைத்திட்டங்களுடனும் எந்தவித வேறுபாடுகளுமின்றி இலவசக் கல்வி நடைமுறைகள் வழங்கப்பட்டாலும் மாவட்டங்களுக்கு இடையிலான கல்வித்தரத்தில் பல ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. குறிப்பாக கொழும்பு, கம்பஹா போன்ற பொருளாதாரப் பலமுடைய மாவட்டங்களையும் மட்டக்களப்பு, மொனராகலை, முல்லைத்தீவு போன்ற குறை வருமானமுடைய மாவட்டங்களையும் ஒப்புநோக்கும்போது அவற்றின் கல்வி வெளிப்பாடுகள் பொருளாதார மட்டத்துக்கும் கல்விக்குமிடையிலான தொடர்பை வெளிப்படையாகக் காட்டும் நிலையாகிவிடுகிறது. அத்துடன், வறுமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வறுமை மிகவும் கூடிய மாவட்டங்களாகக் கருதப்படும் மட்டக்களப்பு, மொனராகலை, முல்லைத்தீவு ஆகியவற்றில் மாணவர்களின் கல்விக்குத் தடையான பல காரணிகள் குறிப்பிடப்பட்டன. அவற்றில் பெற்றோரின் பொருளாதார ஸ்திரமற்ற தன்மை பெரிதும் செல்வாக்குச் செலுத்தியது. இந்தப் பிரதேசங்களில் நகர மக்களின் வாழ்க்கை மாணவர்களின் கல்விக்கு நேர் நிலையானதாகக் காணப்படும் அதேவேளை, கிராம மக்களின் வாழ்வு கல்வியை அதிகமானோருக்கு எட்டாக்கனியாக்கி விடும் நிலையிலுள்ளமையும் எடுத்துக்காட்டப்பட்டது. விவசாயம் செய்யும் போகங்களில் மாணவர்கள் பாடசாலைக்கு வருவதைவிட தனது தந்தைக்கு உதவியாக வயல்களுக்குச் செல்லும் நிலை இங்கு காணப்படுகின்றது. இதை விட கோவில்களில் திருவிழாக்கள் என்றால் மாணவர் வரவு மிகவும் மோசமாகும். இவற்றைவிட முக்கியமான பிரச்சினை யொன்றும் ஆய்வுகளின்மூலம் வெளிப்பட்டது. அதாவது கிராமத்திலிருந்து பாடசாலைகளுக்குள்ள தூரம் காட்டப்பட்டது. அதாவது பல மாணவர்கள் இவ்வாறான அதிக தூரத்தின் காரணமாக போக்குவரத்துக்காக அதிக பணம் செலவழிக்கவேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பெற்றோர் மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பாமல் விடுகின்றனர். இதனால் இடைவிலகல், வரவின்மைபோன்ற நிலைகள் உருவாகின்றன. வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வுத் தரவுகளின்படி, இலங்கையில் உள்ள 10 ஆயிரத்து 165 பாடசாலைகளில் 9ஆயிரத்து 792 பாடசாலைகள் மாகாணப் பாடசாலைகளாக அமைவதுடன், இவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதி தேசிய பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது குறைவாகும். அத்தோடு வளப்பரம்பலும் அவ்வாறே. இவ்வாறாக புவியியல், சமூகம் மற்றும் பொருளாதார ரீதியிலான காரணங்களும் மாணவர்களின் கல்வியைப் பாதிப்பதாக அமைகின்றன.

பிற்போக்கான சிந்தனைகளால் கல்விமட்டத்தில் பின்னடைவு

கிராமப்புறங்களில் பிற்போக்கான பெண்ணியல்வாதக் கருத்துக்களும் சமத்துவமற்ற தன்மையைக் கல்வியில் காட்டுவதாக அமைகின்றன. குறிப்பாக பெண்கள் பாடசாலைக்குச்செல்வதும் உயர்கல்வியைக் கற்பதும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவில்லை. குறிப்பாக 'தரம் 9 வரை கற்றால் போதும்' என்ற மனநிலையில் அத்தகு பெற்றோர் காணப்படுகின்றனர். இது பால்நிலை சமத்துவமின்மைக்கு வித்திடும் செயலாகும். இதில் மற்றுமொரு காரணமும் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணுவதாக அமைகின்றது. குடும்பத்தில் போதைப்பழக்கத்துக்கு அடிமையாகியுள்ள தந்தையின் செயற்பாட்டாலும், அதன் விளைவாக ஏற்படும் குடும்ப வறுமை காரணமாகவும் தாய்மார் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் சென்று வருமானமீட்டத் துணிந்து செல்கின்றனர். இந்தநிலை பாடசாலை செல்லும் பிள்ளைகளை கடுமையாக பாதிக்கும் செயலாகும். குறிப்பாக இந்த நிலையில் பிள்ளையை பராமரிப்பவராக அம்மம்மா, அப்பம்மா போன்றோர் காணப்படுவர். இவர்கள் எந்தளவுக்கு தாயின் அன்பு, அரவணைப்பை வழங்குவார்கள் என்பது சந்தேகமே. ஏபிரகாம் மாஸ்லோ குறிப்பிட்டதைப் போன்று அன்பு, அரவணைப்பு இவற்றுக்கு மேலதிகமாக பாதுகாப்புத் தேவை பிள்ளைக்கு வழங்கப்படும் போதே அவன் கற்றலுக்கு தூண்டப்படுவான். ஆனால் பிள்ளைகளுக்கு மேற்குறிப்பிட்ட நிலமையில் அவை ஏதும் கிடைக்காது. இது பிள்ளையில் நேரடித் தாக்கத்தை உண்டு பண்ணும் செயற்பாடாகிவிடும்.

வளப்பற்றாக்குறை

மற்றுமொரு மாணவர்களைப் பாதிக்கும் பிரச்சினையாக அமைவது ஆசிரியர் பற்றாக்குறையாகும். குறித்த பாடத்துக்கான ஆசிரியர் குறித்த பாடத்தைக் கற்பிக்கும்போது மட்டுமே கற்பித்தல் பூரணமடையும். அவ்வாறில்லையேல் மாணவர்கள் குழப்பமடையும் நிலைக்குத் தள்ளப்படுவர். இதனால் அவர்களின் அடைவும் பாதிக்கப்படும். அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் செல்ல விரும்புவதில்லை. ஏதோவொரு காரணத்தைக்காட்டி நகரப் பகுதிகளுக்குச் சென்று விடுவர். இந்த நிலையில் பல கிராமப்புறப் பாடசாலைகள் இன்றும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம், அழகியற்கலைப் பாடங்கள் என்பவற்றைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாமல் தடுமாறுகின்றன. இதனால் மாணவர்களில் குறித்தபாடம் தொடர்பாகவிருத்தியடையவேண்டிய திறன்கள் மழுங்கடிக்கப்பட்டு மாணவன் பாடசாலைக் கல்வியிலிருந்து விடுபட வாய்ப்பை ஏற்படுத்துகின்றது.



அடுத்து இன்றைய அசாதாரண காலப்பகுதியில் மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் நிகழ்நிலைக் கற்பித்தலின் அடிப்படையில் இணையமூடாக கற்பிக்கப்பட்டு வருகின்றது. பாடசாலைகள் எப்போது ஆரம்பமாகும் என்பது தொடர்பில் ஊகிக்க முடியாத நிலை காணப்படும் இச் சந்தர்ப்பத்தில் கிட்டத்தட்ட நான்கரை லட்சம் மாணவர்களும் அவர்களது பெற்றோரும், இரண்டரை இலட்சம் ஆசிரியர்களும் ஏனைய கல்விச் சேவை உத்தியோகத்தர்களும் என முழுச் சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் கல்வி நடவடிக்கைகளில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். இந் நிலையில் தகவல் தொழில்நுட்பத்தினூடாக செயலிகள் மூலம் கற்பித்தல் நடைபெறுகின்றது. இந்த நிலை மாணவர்களுக்கு தொழில்நுட்ப ரீதியான பல சிக்கல்களைக் கொண்டுவருவதாக அமைகின்றது.

இவ்வாறான நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மூலமான கற்பித்தலை மேற்கொள்வதற்கான அறிவு மாணவர்களிடமும் பெற்றோரிடமும் உள்ளதா என்பது பெரிதும் கேள்விக்குறியே. அத்தோடு அதற்கான சாதனங்கள் இருப்பதும் சந்தேகமே. இலங்கையின் கணினி அறிவு வீதமானது நகர்ப் புறங்களில் 39.2 வீதமாகவும், கிராமப் புறங்களில் 25.5 வீதமாகவும் மலையகத்தில் 9 வீதமாகவும் காணப்படுகின்றது.

இன்றைய இணையவழிக் கற்பித்தலால் மாணவர்கள் குழப்பமடையும் மனநிலைக்கும் தள்ளப்பட்டள்ளனர். குறிப்பாக ஒவ்வொரு பாடசாலைகளும் தரம், பாடம் என பவற்றுக்கு ஏற்ப வட்ஸப் குழுக்களை உருவாக்குகின்றன. இதைவிட கல்வி வலயங்கள் மூலமாக உருவாக்கப்படும் குழுக்கள், தனியார் கல்வி நிலையங்கள் மூலமான குழுக்கள் என்பவற்றிலும் மாணவர்களின் குழுக்கள் பலவகைப்படும். உதாரணமாக க.பொ.த சாதாரண தரம் கற்கும் ஒரு மாணவனிடம் மெற்கொள்ளப்பட்ட நேர்காணலில் பெறப்பட்ட விடயங்கள் பின்வருமாறு. தனது பிரதான 9 பாடங்களுக்கும் 9 குழுக்களும், வலயத்தினால் பாடரீதியாக உருவாக்கப்பட்ட 9 குழுக்களும், தனியார் கல்வி நிலையத்தின் 5 குழுக்களுமாக மொத்தம் 23 குழுக்களில் தான் அங்கம் பெறுவதாகவும் இந்தக் குழுக்கள் அடிக்கடி வழங்கப்படும் குறிப்புக்கள், வீடியோக்கள் மூலம் கைத்தொலைபேசியின் சேமிப்பகம் நிரம்பி வழிவதாகவும் கூம் வகுப்பு, ஒன்லைன் பரீட்சை என்பன நடைபெறும் போது எதில் இணைவது என்று குழம்பியே தமது காலம் கழிவதாக அவர் குறிப்பிட்டார். இதுதான் அநேக மாணாக்கரின் நிலை.

கல்வியில் சமத்துவம்பெற அவகாசங்கள் அவசியம்!

இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு இலங்கை அரசினால் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலமாக கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதிலும் தடைகள் இல்லாமலில்லை. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தேசிய தொலைக்காட்சிகளைப் பார்ப்பதைவிட இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பவர்களின் எண்ணிக்கை வீதம் உயர்வாகும். இந்தநிலையில் தேசிய தொலைக்காட்சி மூலமாக இவர்கள் எப்படிக் கற்க முனைவார்கள்?

மேற்காட்டிய நடைமுறைகளில் இணையாமலிருக்கும் பிள்ளைகளை கவனியாமல் பொதுப் பரீட்சைகளை நடத்த முடியுமா? எனினும் அது கல்வியின் சமத்துவத்தைப் பாதிப்பதாகிவிடுமே.

ஆகவே பாடசாலைகள் திறக்கப்பட்ட பின்னர் விடுபட்ட பாடத்திட்டங்களை முடிப்பதற்கான கால அவகாசங்களை வழங்கியும், பாடத்திட்டங்களை குறைத்தும் பரீட்சைகளை வைக்க முடியுமாயின் அது மாணவர்களைப் பாதிக்காத செயலாகிவிடும். பரீட்சைக்கான உத்தேச திகதிகள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலை மாணவர்களில் பதற்றத்தையும் உளரீதியான சிக்கல்களையும் உண்டு பண்ணுவதாகின்றது. இவ்வாறான தற்கால நிலையில் பல்வேறான சிக்கல்களுடன் மாணவர்கள் தமது கற்றல் நடைமுறைகளைக் கொண்டுசெல்கின்றனர். ஆகவே மாணவர்கள் சார்பான நடைமுறைச் சாத்தியமான பல்வேறான திட்டங்கள் சமூக, பொருளாதார ரீதியாக அரசால் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதன் வாயிலாக இந்தப் பிரச்சினைகளை ஓரளவுக்கேனும் குறைத்துக் கொள்ள முடியும் என்பது வெளிப்படை.



வவுனியா நகர சபை பட்ஜெட் நிறைவேற்றம்

வவுனியா,நவ.19

வவுனியா நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா நகர சபையின் தலைவர் இ.கௌதமன் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை சபை அமர்வு இடம்பெற்றது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் தனுஸ்காந் எதிர்த்து வாக்களித்தார். ஏனைய 18 உறுப்பினர்களின் ஆதரவுடன் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

பட்ஜெட்டில் 10 வட்டாரங்களுக்கு தலா 3.5 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஒ-4-110)

கஞ்சாவைப் பயிரிடுவோம் கடனை உடனே அடைப்போம்

டயனா கமகே எம்.பி. அரசுக்கு மீண்டும் ஆலோசனை

கொழும்பு, நவ. 19

கஞ்சா பயிரிடுவதன்மூலம் கூடுதலான அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே தெரிவித்தார்.



2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் மூன்றாம்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'2025ஆம் ஆண்டளவில் கஞ்சாவுக்கான உலக சந்தை மதிப்பு 8.6 பில்லியன் டொலர் முதல் 10.5 பில்லியன் டொலர் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் பெருமளவான மருத்துவப் பயிர்களை முறையாகப் பயிரிட்டு, ஏற்றுமதிசெய்து அந்நியச் செலாவணியைப் பெறமுடியும். நாம் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்ல வேண்டியதில்லை. எவரிடமும் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை. தேயிலை, இறப்பர், தெங்கு போன்றவற்றுக்கு கடந்த காலங்களில் சர்வதேச அரங்கில் காணப்பட்ட கிராக்கி தற்பொழுது கிடையாது. கஞ்சா செய்கையில் ஈடுபட்டு, அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற்றுக் கொள்ளத் தேவையில்லை - என்றார். (ம)

வயிற்றுவலியுடன் வாந்தி இளைஞன் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், நவ. 19

வயிற்று வலியுடன் கூடிய வாந்தியால் அவதிப்பட்ட இளைஞன், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

துறைமுகவீதி மாதகல் பகுதியைச் சேர்ந்த சுவாமிப் பிள்ளை அன்ரன் வினோஜன் (வயது - 22) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த இளைஞன் கடந்த 15 மற்றும் 16ஆம் திகதிகளில் வயிற்று வலியால் பாதிக்கப்பட்டிருந்தார். அதனையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும்.

(த-25)

குப்பை கொட்டியவரே திரும்ப அள்ளினார்!

யாழ்ப்பாணம், நவ.19

தொல்புரம் பிரதேச வீதிகளில் முறைகேடான விதத்தில் குப்பை கொட்டியவரே அதனைத் திரும்ப அள்ளினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தொல்புரம் பிரதேச வீதிகளில் லான்ட்மாஸ்டர் ஒன்றில் வந்தவர் முறைகேடான விதத்தில் குப்பைகளை கொட்டிவிட்டுச் சென்றனர். இதனை அவதானித்த வட்டார பிரதேச சபை உறுப்பினர் ஜெயந்தன், சி.சி.ரி.வி. காட்சிகளைக் கொண்டு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டார்.

இதனையடுத்து துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார், குறித்த வாகன உரிமையாளரை இனங்கண்டு, நேற்று புதன்கிழமை அவரைக்கொண்டே வீதிகளில் வீசப்பட்ட குப்பைகளை அப்புறப்படுத்தினர். (ஒ-ரி1-319)



மக்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்களின் ஒத்துழைப்பும் அவசியம்

தவிசாளர் வாமதேவன் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.19

மக்களின் தேவைகளை நாம் நிறைவேற்ற வேண்டும் என்றால், அவர்களும் ஒத்துழைப்பு வழங்கினாலே அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்று சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

சபையின் மாதாந்த அமர்வில், தலைமையுரையாற்றி, அவர் தெரிவிக்கையில்;

வெள்ள இடரைத் தடுக்க திட்டமிடப்படாத அபிவிருத்திகளே மேற்கொள்ளப்படுகின்றன. வெள்ள இடர் வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மக்களுக்கே துன்பம் ஏற்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் உரிய இடங்களில் முறையிடாமல், வேறு வழிகளை நாடுகின்றனர். ஆனால், மக்கள் எமக்கு முறையிடும் சந்தர்ப்பத்தில் நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

சில இடங்களில் நாம் அபிவிருத்திகளை மேற்கொள்ளும்போது, சிலர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. விமர்சிப்பதில் அக்கறை காட்டுகின்றனர். இன்றைய இளம் சமுதாயமும் எதற்கும் முன்வருவதில்லை.

எமது பிரதேசசபையால் எந்தவிதமான அபிவிருத்தித் திட்டங்களாயினும் கட்சி வேறுபாடின்றியே முன்னெடுக்கப் படுகின்றன. கொரோனாத் தொற்றுக்காலத்தில் நிர்வாக ரீதியான பல பிரச்சினைகளை எதிர் கொண்டிருந்தபோதிலும்கூட, எங்களால் முடிந்தவரை எமது சக்திக்கு ஏற்ற வகையில் சிறப்பான பணிகளைச் செய்திருக்கின்றோம் - என்றார். (ஒ-4-159)



பிரிட்டன் உயர்ஸ்தானிகர் - ரெலோ மக்கள் பிரச்சினைகள் பற்றி பேச்சு

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் ஐ.நா. பிரேரணை சம்பந்தமாக இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் ஸாரா ஹல்டன் அம்மையாரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ கட்சியின் முக்கியஸ்தர்களும் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் மற்றும் சட்டத்தரணி தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் ஐ.நா. பிரேரணை சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டன.

அதன்படி, தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்கும் முக்கியமான பிரச்சினையான காணி அபகரிப்பு, இன குடிப்பரம்பல் சிதைப்பு என்பவற்றைத் தற்காலிகமாக தடுத்து நிறுத்தும் முயற்சியாக ஐ.நா. பிரேரணையில் பரிந்துரைக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக நிறைவேற்றுவது, மாகாணசபைத் தேர்தல்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. - என்று ரெலோவின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (த)

பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாகக் கூறி

மோட்டார் சைக்கிளை சேதமாக்கிய விஷமிகள்

யாழ்ப்பாணம்,நவ.19

கசிப்புக் காய்ச்சல் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார் என்று கூறி, ஒருவரது மோட்டார் சைக்கிள் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுகுட்பட்ட பொன்னாலையில் இடம்பெற்றுள்ளது. கசிப்புக் காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டை பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர்.

இதற்குத் தகவல் வழங்கினார் என்று, அதே பகுதியைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிளை சேதமாக்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற் கொண்டு வருகின்றனர். (ஒ-4-125)

ஒரே நாளில்

3,800 மெற்றிக்தொன் பெற்றோல் விநியோகம்

கொழும்பு,நவ.19

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாளாந்தம் சுமார் 3 ஆயிரத்து 200 மெற்றிக்தொன் பெற்றோலை விநியோகம் செய்கின்றது. இருந்த போதிலும் கடந்த 15 ஆம் திகதி கூடுதலாக 600 மெற்றிக் தொன் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவிக்கையில்;

கடந்த சில நாள்களாக அதிகளவான எரிபொருள்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதனால் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இருப்புக்கள் முடிவடைந்துள்ளன.

நாளாந்தம் 5 ஆயிரத்து 200 மெற்றிக்தொன் டீசல் விநியோகிக்கப்படுகின்றது. தற்போது அதற்கும் மேலதிகமாக டீசல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களில் இரவு 10 மணிக்கு மேலாகவும் எரிபொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அதனால் எரிபொருள் விநியோக பவுஸர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்தமாதம் வரைக்கும் தேவையான எரிபொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ம-4)

போதுமான எரிபொருள் தற்போது கையிருப்பில்

கொழும்பு, நவ. 19

நாட்டில் போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எனவே பொது மக்கள் தேவையற்று பீதி அடைய வேண்டாம் என்று இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாடு முழுவதும் தற்போது எரிபொருள் விநியோகம் துரிதமாக நடைபெற்று வருகின்றது. களஞ்சியசாலைகளிலும் போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை, எனவே அவசரப்பட்டு எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் நிரப்ப வேண்டாம். நாட்டுக்குத் தேவையான எரிபொருள் தற்போது எமது கிடங்குகளில் உள்ளது. தொடர்ந்து இறக்குமதியும் இடம்பெறுகின்றது.

எரிபொருள் நிலையங்கள், வழக்கமாக ஒரு நாள் அல்லது இரண்டு நாள்களுக்குத் தேவையான எரிபொருள்களையே வாங்குகின்றன. அவை அனைத்தும் முடிந்தவுடனேயே அவர்கள் மீண்டும் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்கின்றனர். இதன் காரணத்தாலேயே எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

சபுகஸ்கந்த மூடப்பட்டதால், எரிபொருள் விநியோகங்கள் அனைத்தும் கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன - என்றார். (ம-4)

"நந்தி ஒழிக" வாசகத்துக்கும் மதத்துக்கும் தொடர்பில்லை

ஐ.ம.ச. எம்.பிக்கள் விளக்கம்

கொழும்பு, நவ.19

எதிர்க்கட்சியினரின் நாடாளுமன்ற ஆர்ப்பாட்டத்தில் "நந்தி ஒழிக, நீதி வாழ்க" என எழுதப்பட்ட பதாகை காட்சிப்படுத்தப்பட்டமை தொடர்பில் இந்து மதத்தை முன்னிறுத்தி வெளிவரும் விமர்சனங்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விளக்கமளித்துள்ளனர்.

"நந்தி மாதிரி குறுக்கே வராதே" என்பது கிராமங்களில் கூறப்படும் ஒரு வழக்காற்றுச்சொல். மக்கள் சார்ந்து நாம் முன்னெடுக்கும் போராட்டங்கள், நடவடிக்கைகளின் போதெல்லாம் அரசும் பொலிஸாரும் குறுக்கீடுகளை ஏற்படுத்துகின்றனர். கொழும்பில் செவ்வாய்க்கிழமை நடத்திய மக்கள் சக்தி போராட்டத்தின் போதும் பொலிஸார் குறுக்கீடுகளை செய்தனர்.

அரசினதும் பொலிஸாரினதும் இவ்வாறான குறுக்கீடுகளைக் கண்டிக்கும் வகையிலேயே கிராமத்து வழக்காற்றுச்சொல்லான "நந்தி மாதிரி குறுக்கே வராதே" என்ற சொல்லை உதாரணமாக கொண்டு, அரசு எமது போராட்டங்களுக்கு குறுக்கே வரக்கூடாது என்பதனை வலியுறுத்தி "நந்தி ஒழிக நீதி வாழ்க" என்ற பதாகையை பயன்படுத்தினோமே தவிர இந்து மதத்தை இழிவுபடுத்தும் நோக்கம் எமக்கோ கட்சிக்கோ சிறிதளவும் கிடையாது. இந்தக் காரணிகளை வைத்து மத விமர்சனங்களைச் செய்ய வேண்டாம், இவை இந்து மதத்துடன் கடுகளவேனும் தொடர்புபடுத்தும் நோக்கத்தில் எழுதப்பட்ட வாசகங்கள் அல்ல என்று அவர்கள் தெரிவித்தனர்.



(எ-இ)

தனித்திருந்த மூதாட்டியின் பணம் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.19

வயோதிபப் பெண் ஒருவரின் வீட்டில் 75 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரியில் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது. தனித்திருந்த வயோதிபப் பெண், வங்கிக்குச் சென்று 75 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்து வந்துள்ளார். அதனை வீட்டில் வைத்துவிட்டு உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று மாலை வீடு திரும்பிய போது பணம் காணாமற் போனதை அறிந்தார். அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ-4-159)

போதையில் கும்பலொன்று ஆசிரியர் மீது தாக்குதல்!

வவுனியா, நவ. 19

வவுனியா, மன்னார் பிரதான வீதியில் காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக மதுபோதையில் நின்றிருந்த இளைஞர் குழுவொன்று வீதியால் சென்றவர்களை வழிமறித்து தாக்குதல் நடத்தியதில் ஆசிரியர் ஒருவர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் சுமார் ஒரு மணிநேரம் அந்தப் பகுதியில் நின்ற இளைஞர்குழு, குறித்த வீதியால் செல்பவர்களை வழிமறித்து, தாக்குதல் நடத்தியுள்ளது. இவ்வாறு தாக்குதல் நடத்தியதிலேயே ஆசிரியரொருவர் காயமடைந்து, வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-18)

ஐ.ம.ச. போராட்டத்தில் "நந்தி ஒழிக" பதாகை!

இந்து அமைப்பு எதிர்ப்பு

கொழும்பு, நவ.19

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சியின் ஏற்பாட்டில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் "நந்தி ஒழிக, நீதி வெல்க" என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் பேரணிக்கு பொலிஸாரால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதுதொடர்பில் விசாரணை செய்ய வேண்டும் என்று சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துமே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தின்போது பதாகையில் நந்தி ஒழிக என்று எழுதப்பட்டிருந்தமைக்கு சர்வதேச இந்து மத பீடம் கண்டனம் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக சர்வதேச இந்து மட பீடம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:-

இந்துமத மக்களின் மனதை இந்த விடயம் பெரிதும் புண்படுத்துவதாக உள்ளது. சிவ ஆலயங்களில் நந்தீஸ்வரர் வழிபாடு சிவ பக்தர்களால் போற்றி வணங்கப்படுகின்றது.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் நந்தி ஒழிக என்ற பதாகை இந்து மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பதாகையை தாங்கியமைக்கு உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்து மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் - என்றுள்ளது.

(எ-இ)

வாகன நெரிசலால் போக்குவரத்து சிரமம்

வவுனியா,நவ.19

வவுனியா, தர்மலிங்கம் வீதியில் சாலையோரம் நிறுத்தப்படும் கனரக வாகனங்கள் மற்றும் போக்குவரத்துப் பொலிஸார் இன்மை ஆகியவற்றால் வாகன நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது என அந்தப் பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியா தர்மலிங்கம் வீதியில் கடைத்தொகுதிகள் நிறைந்து காணப்படுகின்றன. இங்குள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக கனரக வாகனங்கள் தரித்து நின்று, பொருள்களை இறக்குவதால் வாகன நெரிசல் ஏற்படுகின்றது. அத்துடன் இந்த வீதியில் சட்டவிரோத நிழல் தரிப்பிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை அவ்வப்போது நகர சபையினரால் அகற்றப்பட்டு, பின்னர் அந்நடவடிக்கை கைவிடப்படுகிறது. இதனால் இந்த வீதியில் அடிக்கடி விபத்துக்களும் நிகழ்கின்றன.

ஆகவே குறித்த வீதிக்கு போக்குவரத்து பொலிஸாரை கடமையில் அமர்த்தி, போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-110)

மரண அறிவித்தல்



பூபாலசிங்கம் வேலு

வவுனியா பூந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இந்திராபுரம் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் வேலு நேற்று (18.11.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், வேலு விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரி, விஜயகுமாரி, காலஞ்சென்ற முத்துலிங்கம், சதானந்தன் (குட்டி), ஜெயந்தன், தர்சினி ஆகியோரின் அன்பு தகப்பனாரும், ராஜேந்திரன், விஜயகுமார், சுரேஸ்குமார், நிர்மலாதேவி, கலைச்செல்வி, கேதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ராஜ்மோகன், ராதிகா, யஸ்மிகா, விதுஷா, டிலக்சனா, மதுசாளினி, லிசானி, கர்சனா, கேதுசா, நிசாங்கன், திவிசன், சானுயன், பிரியங்கன், கிருசாந்தன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், ரிஸ்மியின் பிரியமான அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் புன்னையடி அரசர்கேணி பளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குட்டி - 077 6763 409
சதானந்தன் - 077 6378 015

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 5944) 1-6

33 ஆவது பிறந்த தினமும் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



தோற்றம்
19 • 11 • 1988

மறைவு
23 • 08 • 2018

அமரர் கனகலிங்கம் கார்த்திகா

(கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் - மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்)

இதம் தரும் கார்த்திகையில் இனியதொரு பிறவி கண்டாள்
தம்பதி கனகலிங்கத்திற்கு தங்க மகள் கார்த்திகா
செல்லும் வழி உறுதி கொண்டு வல்ல செயல் வலிந்து முடிப்பாள்
உள்ளமதில் வஞ்சம் காணா நல்ல மகள் ஆகிப்போனாள்

செய்யும் தொழில் தெய்வமென செய்கை வழி காட்டி நிற்பாள்
அர்ப்பணித்து கடமை செய்யும் அத்துணை நல் கெட்டிக்காரி
வெஞ்சினம் கொஞ்சம் உண்டே வெள்ளந்தி மனசு கொண்டாள்
குணமதில் கோபம் கண்டும் கொள்ளை அன்பில் குறைகாட்டாள்

பாசம் தந்த தேவதையே பாதியிலே சென்றுவிட்டீர்
நேசக்கரம் நீட்ட இங்கு நீரில்லை தவிக்கிறோமே !
பக்கம் நாம் இல்லை என்றும் சொர்க்கத்தில் நீ இருப்பாய்
நினைவுகளின் தடம் வழியே நிதம் நாமும் கடக்கின்றோம்

அகவை நாள் இன்றுமக்கு அருகிலில்லை ஆரத் தழுவ
நிலை காணா இவ்வுலகில் - எம் நெஞ்சத்துள் நீயும் வாழ்வாய் !!

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(cs 41172)(2.6)

குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

திருமதி பொன்மலர் நடேசன்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மலர் நடேசன் அவர்கள் கடந்த (15.11.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சிவகாமிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம் பதியரின் அன்பு மருமகளும், திரு. சுப்பிரமணியம் நடேசன் அவர்களின் பாசமிகு மனைவியும், கோமதி, வசிகரன் ஆகியோ ரின் பாசமிகு தாயாரும், வாசன், அபிராமி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவானி, லிசானி, சாய் கணேஷ், சாய் கார்த்திக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற இரத்தின சபாபதி மற்றும் சபாகுணசிங்கம் (கனடா), புஸ்பராணி ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், பத்மா மற்றும் காலஞ்சென்றவர் களான பரமநாதன். பத்மநாதன். பாலநாதன், மீனா ஆகியோ ரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரித்தானியாவில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம்
04.01.1946

மறைவு
15.11.2021

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு.

(cs.41174) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

வேலையாள்கள் தேவை

யாழ் மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு சமையலாளர், சமையல் உதவியாளர், Delivery Boy மற்றும் பராமரிப்பாளர் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(cs.41164) (2.6) 077 314 7580

நேரடி வகுப்பு

பௌதிகவியல்
M.கருணாநிதி B.Sc (Spl)
(ஆங்கில தமிழ் மூலம்)
A/L - 2023, 2022, 2021 - DAY
ஆரம்பம்: 20.11.2021 SAT
NEW SCIENCE HALL அருகில்
077 618 3064
(cs.41169) (2.6) வழமையான நேர அட்டவணை

மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா
077 334 1281 (m17816) (2.6)

மாவீரர்களை...

பிரிவில் எதிர்வரும் 20 ஆம் திகதிமுதல் 27 ஆம் திகதி வரை மாவீர் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்று வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துக்கமைய வவுனியா நீதின்றம் குறித்த 8 பேருக்கு தடை உத்தரவு விதித்துள்ளது.

அந்தவகையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தைச் சேர்ந்த கோ.ராஜ்குமார், கா.ஜெயவனிதா, மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம், கஜேந்திரகுமார் அல்லது கயன், சு.தவபாலசிங்கம், செ.அரவிந்தன் ஆகியோருக்கு குறித்த தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நபர்கள் வவுனியா பொலிஸ் பிரிவில் எதிர்வரும் 20 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரை மாவீரர் நிகழ்வை அல்லது அதனுடன் தொடர்புடைய அனைத்து நிகழ்வுகளையும் நிறுத்துவதற்கு கட்டளையிடப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 6 ஆம் திகதி நீதிமன்றில் பிரசன்னமாகுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர்களை நினைவேந்த 28 பேருக்கு அந்த மாவட்ட நீதிமன்று தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-110)

'தீக்குள் விரலை வைத்தால்' எழுத்தாளர் ஆனந்தன் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், நவ. 19


'தீக்குள் விரலை வைத்தால்' என்ற புகழ்பெற்ற நாவலை எழுதிய மூத்த எழுத்தாளர் இணுவையூரைச் சேர்ந்த கே.எஸ்.ஆனந்தன் தனது 82 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். 'தீக்குள் விரலை வைத்தால்' என்ற இவரது நாவல் மிகவும் பிரசித்தி பெற்றது. பலராலும் புகழ்ந்துரைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

உறவும் பிரிவும் (1964), தீக்குள் விரலை வைத்தால் (1972), மர்மப்பெண் (1974), கர்ப்பக் கிருகம் (1974), காகித ஓடம் (1974), சொர்க்கமும் நரகமும் (மாணிக்கம் இதழ்த் தொடர்), கனலும் புனலும் (மாணிக்கம் இதழ் தொடர்) எனப் பல நாவல்களைப் படைத்த படைப்பாளி. சிறந்த பேச்சாளரான அவர் கலைஞராகவும் நாடகத்துறையிலும் ஈடுபட்டுப் பாராட்டுப் பெற்றவர். - என்று தெரிவிக்கப்பட்டது.

(த)

மரண அறிவித்தல்

கனகரத்தினம் விக்னேஸ்வரன்



காரைநகர் வாரிவளவை பிறப்பிடமாகவும் பதுளை மற்றும் வாரிவளவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் விக்னேஸ்வரன் 17.11.2021 அன்று காரைநகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - ராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வதியின் அன்பு கணவரும், கயகரன், கார்த்தீபன், காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிவதனபூசணி, ராமராவ், சரோஜா, ஜெயராணி, கணேசமூர்த்தி, ஆகியோரின் அன்பு சகோதரனும் ரஜீவ் காந்த், ருத்திராவதி, தார்ணி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் சிவமலர் சிவகுருநாதன், நாகராஜா, ராதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பானுஜன், மயூசன், கவின், திவ்யன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.11.2021) வெள்ளிக்கிழமை காலை 8 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: மகன் : 077 215 4688
ராமராவ் : 077 741 0401
கணேசமூர்த்தி: 077 566 5095

தகவல்: சி. கஜானனன் (மருமகன்)

மரண அறிவித்தல்

தோற்றம் 15 • 06 • 1936

மறைவு 11 • 11 • 2021



திருமதி பாக்கியம் சங்கரப்பிள்ளை (B.A)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், இல.35, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், இல.29, புகையிரத நிலைய விடுதி, திருகோணமலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சங்கரப்பிள்ளை அவர்கள் கடந்த 11.11.2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.பொன்னையா - திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. நாராயணன் - திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு.சங்கரப்பிள்ளை (B.SC,- Hons, Dip - in Edu,- ஓய்வு பெற்ற ஆசிரியர், முன்னாள் திட்ட இணைப்பாளர் - சர்வோதயம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஹேமலதா மகேஸ்வர் (BSC - முன்னாள் ஆசிரியை, தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி - கனடா), காலஞ்சென்ற செல்விகள் ஸ்வர்ணலதா (B.A,Dip - in Edu, English Trained, முன்னாள் ஆசிரியை, யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), மற்றும் கீதாஞ்சலி (B.A English Trained, முன்னாள் ஆசிரியை, யா/கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்), செல்வி மீரா (இலங்கை புகையிரதத் திணைக்களம்), திருமதி வாணி சுரேஸ்குமார் (முன்னாள் ஆசிரியை, தி/ ஆலங்கேணி விநாயகர் ம.வி.- இந்தியா), திரு. பாலமுரளி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு.மகேஸ்வர் (கனடா), திரு. சுரேஸ்குமார் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜனனி, பிரதீப், ரிஷி, ஒவியா, இலக்கியா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான திரு. இராசையா (ஓய்வுபெற்ற உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர், புகையிரதத் திணைக்களம்), திரு. பூவிலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திரு. இராசரத்தினம் மற்றும் திரு. சிவஞானம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் - இ.போ.ச), திருமதி பரமேஸ்வரி அன்ரனி (ஓய்வுநிலை உப அதிபர்), திரு.பரமானந்தம் (பிரான்ஸ்), திரு. பாலச்சந்திரா (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. P.J.அன்ரனி JPUM (பதில் நீதவான், ஓய்வுநிலை அதிபர்), பரிபூரணம், காலஞ்சென்ற மரியமுத்து (ஓய்வுநிலை உப அதிபர்), சுசீலாதேவி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, பவானி (ஓய்வுநிலை ஆசிரியை), காலஞ்சென்ற திரு. பூபாலசிங்கம், திருமதி சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்ற திருமதி சின்னமணி, திருமதி ஜெயலட்சுமி, திருமதி ஜீவரட்ணம், செல்வி. மல்லிகா (ஓய்வுநிலை ஆசிரியை), திரு.தவகுலரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2021) வெள்ளிக்கிழமை அன்று இல. 35, பலாலி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு : 021 222 0096 (CS 41159) (1/6) தகவல் : குடும்பத்தினர்

31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 25 • 09 • 1935

இறப்பு 20 • 10 • 2021


அமரர் சின்னத்தம்பி இராசதுரை

(ஓய்வு நிலை தொலைத்தொடர்பு திணைக்கள ஊழியர்)

என்றும் அகலாது உங்களின் நினைவுகள்
அன்பினால் பண்பினால் ஆளுமையால்
எங்கள் அனைவரது உள்ளங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கும் அன்புத்
தெய்வத்திற்கு எம் இதயக் கமலத்தால்
மலர்தூவி அனைவரும் ஆத்மா
சாந்தி வேண்டி வணங்குகின்றோம்.

வானாப்புலம், சுன்னாகம் கிழக்கு. (cs18067) (2.6) குடும்பத்தினர்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் துரைராஜா ஸ்ரீரூபன்

திதி: பிரதமை (19.11.2021)

தோற்றம் 17.12.1963

மறைவு 01.12.2020

ஓடி உருண்டது உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகிறோம் உயிர்துடித்து கண்ணீரோடு
ஓராண்டல்ல ஓராயிரமாண்டுகள் கழியினும்
நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்.

7, காரைக்காட்டு வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

(cs18074) (2.6)

தென்மராட்சியில்

பிரதி அதிபர்கள் இருவர் ஒரேநாளில் உயிரிழப்பு

சாவகச்சேரி, நவ. 19

தென்மராட்சிப் பிரதேச இரு முன்னணிப் பாடசாலைகளின் பிரதி அதிபர்கள் ஒரேநாளில் உயிரிழந்தமை கல்விச் சமூகத்தை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் சே. ரவீந்திரன் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் காலையும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் ஐ. குணசீலன் நெஞ்சுவலி காரணமாக நேற்று முன்தினம் மாலையும் உயிரிழந்தனர்.

(த-9)

யாழ்ப்பாணத்தில்...

மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ் வாறு அறிவிப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மாதத்துடன் ஒப்பிடும்போது தற் போது கொரோனா அதிகரித்துச் செல்கி றது. எனவே, பொதுமக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்கவேண்டும். தனியாள் இடைவெளியைப் பேணுங்கள். முகக்கவசம் அணிவதைக் கட்டாயம் பின் பற்ற வேண்டும்.

மாவட்டத்தில் கொரோனாத்தொற்றால் இதுவரை 469 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போதைய சூழலில் 634 குடும்பங்கள் கொரோனாத் தொற்றால் தனிமைப்படுத் தப்பட்டுள்ளன.

தற்போதைய சூழலில் தளர்வு நிலை அறி விக்கப்பட்டுள்ளபோதும், சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்களை வெளியிட் டுள்ளது. அதனைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். அவ்வாறு செய்வதன்மூலமே யாழ்ப்பாணத்தில் கொரோனாவை முற்று முழுதாகக் கட்டுப்படுத்தலாம். கொரோ னாத் தடுப்பு நடவடிக்கையில், ஒவ்வொரு வரும் எந்தளவுக்கு கட்டுப்பாட்டுடன் இருக்கின்றோமோ அந்தளவுக்கு நாமும் எமது சமுதாயமும் பாதுகாப்பாக இருக்க முடியும். - என்று தெரிவித்தார். (த-இ)

பொருள்களின்..

திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச் சர், பொருள்களின் தற்போதைய விலை தொடர்பான பிரச்சினை, கொரோனா நிலைமையின் விளைவாகும். இது உல களாவிய பிரச்சினை. அரசாங்கத்துக்கு வருவாயைப் பெறுவதற்கான வழிகள் மற்றும் விலை ஏற்ற இறக்கங்களை நிர் வகிப்பதற்கான வழிகளை நிதியமைச்சர் எடுத்துக்காட்டினார். எனினும், அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நிலைமை கட்டுப் பாட்டுக்குள் வந்துவிடும் - என்று தெரிவித் தார். (த-இ)

தொற்று...

யாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 54 ஆயிரத்து 459 ஆக எகிறியுள்ளது.

அதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 372 பேர் இன்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 25 ஆயிரத்து 560 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத்தொற்றால் மேலும் 15 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 5 பெண்களும், 10 ஆண்க ளும் உள்ளடங்குகின்றனர். இதன்படி நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்பு களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயி ரத்து 72 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

குடும்பஸ்தருக்கு...

வெட்டு நடத்தப்பட்டுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர். உறவுப்பகை காரண மாகவே வாள்வெட்டு நடந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதே பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய குடும்பஸ்தரே காயமடைந்து தெல்லிப் பழை ஆதார மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார்.

வாள்வெட்டு நடத்தியவர் தலைமறைவாகி யுள்ளார் என்றும், விசாரணை தொடர்கின் றது என்றும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (த-27)

கார்த்திகை மலரோடு...

இடங்களில் கார்த்திகை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு விளக்கேற்றப்பட்டி ருந்ததை அவதானிக்கமுடிந்தது. (த-18)

தாதியர்களுக்கு...

உயர்வுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

தாதியர்களுக்கு அவர்களின் தர அடிப்ப டையிலான பதவி உயர்வை வடக்கு மாகாணசபை உரிய காலப்பகுதியில் வழங்கவேண்டும். அவ்வாறு வழங்காத சந்தர்ப்பங்களில் திறமையற்ற நிர்வாகம் வடக்கில் இடம்பெறுகின்ற மாதிரியை ஏற் படுத்திவிடும்.

பொதுச்சேவை ஆணைக்குழு வாரத்தில் ஒருமுறைகூடி தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை சரிவர நிறைவேற்ற வேண்டும்.

பொதுச்சேவை ஆணைக்குழு, வழங்கப் படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் நான்கு வாரங்களுக்குள் சம்பந்தப்பட்ட வர்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாது, மாதத்தில் ஒரு முறை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சென்று மதிப்பீடுகளையும் பிரச்சினைக்கான தீர்வுகளையும் முன்வைக்க வேண்டும். - என்றும் ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார். (த-27)

வலுவான...

வான சமூகத்தில் செல்வாக்கு செலுத்தக் கூடிய ஒரு நிறுவனம் இல்லை. எனவே, அத்தகைய ஒரு நிறுவனம் உருவாகுவ தற்கு சைவமகா சபையைச் சேர்ந்த மருத்துவர் நந்தகுமார் மற்றும் இந்துநா கரிகத்துறை பீடாதிபதி ஆகியோர் இணைந்து செயற்பட வேண்டும். இவ் வாறு, யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

சைவ சமயத்தில் நாங்கள் பிறந்திருப்ப தால் சைவசமயத்தை மறுசீரமையுங்கள். அதனை ஒரு நிறுவனமயப்படுத்துங்கள் என கோரிக்கை முன்வைக்கின்றேன் என் றும் அவர் தெரிவித்தார்.

நாவலரின் 200 ஆவது பிறந்த தினத்தை நினைவுறுத்தும் வகையில், நாவலர் மண் டபத்தில் அகில இலங்கை சைவ மகா சபை அமைத்த நாவலர் திருவுருவச் சிலை நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முதல்வர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாவலர் கலாசார மண்டபத்தில் அமைக் கப்படவிருந்த நாவலர் சிலையை அங்கு அமைப்பதற்கு பல அழுத்தங்களும் எதிர்ப்புக் கடிதங்களும் எனக்கு கிடைத் தன. இருப்பினும், இறைவனின் திருவரு ளால் திருவுருவச் சிலை திறந்து வைக்கப் பட்டுள்ளது.

"பாழடைந்து கொண்டிருக்கின்றது, கவ னிக்கப்படாமல் இருக்கின்றது" என்றெல் லாம் சொல்லப்பட்டு இந்த நாவலர் மண் டபத்தை தங்களிடம் தாருங்கள் என்று பலர் முன்வந்தார் கள், அழுத்தம் தந்தார் கள், அச்சுறுத்தினார்கள் என்றுகூட ஒரு விதத்தில் சொல்லலாம். ஆனால், இந்த நாவலர் மண்டபம் என்பது மாநகர சபைக் குரிய ஒரு சொத்தாக இருக்கிறது.

அதனைப் பராமரிக்கவேண்டிய தேவை இருக்கின்றது. இந்தநிலையில், நாவலர் மண்டபத்தை புனரமைத்து தருகின்றேன் என்று தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிறுவுநர் தியாகேந்திரம் வாமதேவன் முன் வந்திருக்கின்றார்.

அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி இந்த மண்டபத்தை புனரமைத்து புதுப் பொலிவுடன் மீண்டும் சைவத்துக்கும் தமிழுக்கும் நிகழ்வுகளை எடுக்க நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

நான் சைவன் ஆனால் மதவாதி அல் லன். மதவாதிக்கும் மதப்பற்றாளனுக்கும் ஒரு நூலிழையில்தான் வித்தியாசம் காணப்படுகின்றது.

தன்னுடைய மதம் மட்டும்தான் இந்த மண் ணில் வாழ வேண்டும் பிற மதங்களை அடிக்க வேண்டும் என்பது மதவாதம். என்னுடைய மதம் சிறப்பாக செழிப்பாக இருக்க வேண்டும். மற்ற மதங்களும் செழிப்பாக இருக்கட்டும் என நினைப்ப வன் நான்.

சைவசமயம் இந்தியாவிலேயே ஓரள வுக்கு நிறுவன பயன்படுத்தப்பட்டிருக்கின் றது. அங்கே ஆன்மீகத் தலைவர்கள் இருக்கின்றார்கள். எங்களுடைய இடத் திலே ஆன்மீகத் தலைவர் என்று சொல்வ தற்கு ஒரு நிறுவனத்தை சுட்டிக் காட்டுவ தற்கு சரியான ஒரு நிறுவன மயம் இல்லை. இது மிகவும் கவலையாக இருக் கின்றது.

கிறிஸ்தவ மதத்தில் பேராயர்கள் இருக்கின் றார்கள், அதேபோன்று பௌத்த மதத்தி லும் தேரர்கள் இருக்கின்றார்கள். இரண்டு பௌத்த பீடங்கள் இருக்கின்றன. ஆனால், இந்து மதத்தில் வலுவான ஆன் மீகத் தலைவரை காணக்கிடைக்க வில்லை. - என்று மணிவண்ணன்மேலும் தெரிவித்தார். (த-125)

திருமணத்துக்குச்....

அதில் பயணித்தவர்களில் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். 5 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம், கல்கமுக பகுதியில் இடம் பெற்றது. வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த பாரவூர்தியுடன் ஹைஏஸ் வாகனம் நேற்றுஅதிகாலை மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக் கப்பட்டது.

கொழும்பில் நடைபெறவிருந்த தமது புதல்வியின் பதிவுத் திருமணத்துக்காக வவுனியா, தோணிக்கல் பகுதியிலிருந்து சென்ற குடும்பத்தினரே விபத்துக்குள்ளா கினர். விபத்தில் வாகன சாரதி மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பயணித் துள்ளனர். விபத்தில் 6 பேரும் படுகாயம டைந்த நிலையில் கல்கமுக மருத்துவம னையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்க ளில் மூவர் அநுராதபுரம் மருத்துவம னைக்கு மாற்றப்பட்டிருந்தனர். எனினும், சிகிச்சை பயனளிக்காது 22 வயதுடைய ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக் கப்பட்டது.

விபத்துக்குள்ளான இரு வாகனங்களும் கல்கமுவ பொலிஸ் நிலையத்துக்கு எடுத் துச்செல்லப்பட்டுள்ளன. மேலதிக விசார ணைகளை கல்கமுக பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (த-18)

கார்த்திகை..

லில் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் யாழ்ப் பாண பல்கலைக்கழகத்தின் பிரதான வாயில் முன்பாக விளக்குகள் ஏற்றினர்.

இதேவேளை, விளக்கீட்டுக்கு தீபங்கள் ஏற்றுவதற்கு மாணவர்கள் பல்கலைக்க ழக வளாகத்துக்குள் சென்றபோது, பாது காப்புப் பணியாளர்கள் மாணவர்களைத் தடுத்தனர் என்றும் விசனம் தெரிவிக் கப்பட்டது.

இந்தநிலையில், ஆன்மீக ரீதியான செயற் பாடுகளை மேற்கொள்ள எப்படித் தடை விதிப்பீர்கள் என்று மாணவர்கள் கேள்வி கேட்டு தமது எதிர்ப்பை வெளியிட்டவாறு பல்கலைக்கழகத்துக்குள் சென்று கார்த் திகை விளக்கீட்டு தீபங்களை ஏற்றினர்.

இதன்போது, மாணவர்களை அச்சுறுத் தும் வகையில் புலனாய்வாளர்கள் வெளியே நின்றனர் என்று தெரிவிக்கப்பட் டது. பல்கலை மாணவர்கள் மீதான அடக்கு முறையை தட்டிக்கேட்க மாணவர் ஒன் றியத் தேர்தலையும் நடத்தாது கொரோ னாவைக் காரணம்காட்டி பல்கலை நிர் வாகம் இழுத்தடிப்புச்செய்து வருகின்றது என்றும் மாணவர்கள் கவலை தெரிவித் தனர். (த-இ)

ஆயர்களின்...

வடக்கு- கிழக்கு சிவில் சமூகங்கள் சார் பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. - என்று, பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

போரில் இறந்தோர் நினைவு தொடர்பான வடக்கு கிழக்கு ஆயர்களுடனான சந் திப்புத் தொடர்பில் பொத்துவில் தொடக் கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெ முச்சி இயக்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட் டுள்ளது.

அதில், போரில் இறந்தோர் நினைவு தொடர்பில் வடக்கு கிழக்கு ஆயர்கள் பேரவை அண்மையில் வெளியிட்டுள்ள போரில் இறந்தோர் நினைவு எனும் தலைப்பிலான அறிக்கை பல தரப்பின ருக்கும் அதிருப்தியையும், கவலையை யும் தமிழ்த் தேசியத்தின் பால் சந்தேகத் தையும் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு -கிழக்கு சிவில் சமூகங்களாக இந்த விடயம் தொடர்பாக நடைபெற்ற பல்வேறு பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படை யில், சிவகுரு ஆதினம் முதல்வரும், பொத்து வில் தொடக்கம் பொலிகண்டி வரையி லான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகளும், கிழக்கு மாகாண சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் இணைப் பாளரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாள ருமான ச.சிவயோகநாதனும், மட்டக்க ளப்பு மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத் துக்குரிய ஜோசப் பொன்னையா ஆண்ட கையும், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய நோயல் இமானுவேல் ஆண்டகையும், யாழ். மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்கு ரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை யும், மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இமானுவேல் பெர் னாண்டோ ஆண்டகையும் சந்தித்து, மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரை யாடினர்.

இந்தக் கலந்துரையாடலில், மாவீரர் பெற்றோரினதும், தமிழ்த் தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்ட பல்வேறு தரப்பி னரதும் ஆதங்கங்கள், கவலைகள் மற் றும் கருத்துக்கள் என்பன ஆயர்களிடம் எடுத்துரைக்கப்பட்டன. அதன்போதே, ஆயர் கள் பேரவையால் அறிவிக்கப்பட்டிருந்த, 'போரில் இறந்தோருக்கான நினைவு கூரல்' தொடர்பாக கடந்த 20ஆம் திகதிய அழைப்பை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு, வடக்கு -கிழக்கு சிவில் சமூகங்கள் சார் பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. - என்று, பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் குறிப்பிட் டுள்ளது. (த-7)

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.12.1944

மறைவு
19.11.2017

திதி:
துதிகை வளர்பிறை
(05.12.2021)

அமரர்



பொன்னர் - சின்னையா (கொண்டா ராசு)

(பிரபல புகையிலை வர்த்தகரும், அன்னதான புருசரும், யோகாஸ் ஜஸ்கிறீம், எரிபொருள் நிரப்பு நிலையம் மந்திகை, P.S. ஸ்தாபனம் மந்திகை ஆகியவற்றின் ஸ்தாபகரும், பழவத்தை காளி அம்பாள் ஆலய அறங்காவலரும்)

நாளாகிப் போச்சு நாளாகிப் போச்சு
நாவரண்டு இன்றோடு நாலாண்டு ஆச்சு
ஈரவிழி வழிந்தோடி நதியாகிப் போச்சு-உம்
நினைவோடு வாழ்தலே நம் விதியாகி போச்சு

உம் மூச்சு நின்ற நாளில்
எம் பேச்சு நின்று போச்சு
உம்மை தீயுண்ட நாளில்
எம் வீச்சு நின்று போச்சு

தாலாட்டு பாடினாய் நாம் உறங்க
நாம் ஒப்பாரி வைத்தழுதோம் நீர் விழிக்க
உம் செவியிரண்டும் கேட்டதா எம் குரலை
உம் விழியிரண்டும் பார்த்ததா எம் துயரை

இராசா தீபச்சுடராய் எம்மை
ஏற்றி வைத்த ஜீவன்
காற்றடித்த வேளையிலே
அணைந்து போனதென்ன?

சுமந்து வந்த சுமையெல்லாம்
சுகமாகும் வேளையிலே
எம் சுமைதாங்கி இங்கே
சரிந்து விழுந்ததென்ன

கொண்டா இராசு என்னும் பேர்
இன்னும் ஊருக்குள்ள வாழுதய்யா!
நீ தொண்டு செய்த சபைகளெல்லாம்
உந்தன் புகழ் பாடுதய்யா!

சின்னையா பேரைச் சொல்லி
பசியாறும் ஜீவனெல்லாம்
எங்கையா போனீர் என்று
கண்கலங்கி வாடுதையா!

பழவத்தை ஊரையெல்லாம்
அழ வைத்த தந்தையே உம்மை
இழந்த பின்பும் நாம்
வாழ்வதென்பது விந்தையே!

உங்களின் நினைவில் என்றும்,
யோகாஸ் ஜஸ்கிறீம்
(SWISS)
பழவத்தை, வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(CS 17813)1-6

அமெரிக்காவை பின்தள்ளி பணக்கார நாடானது சீனா

பீஜிங், நவ. 19

அமெரிக்காவை பின்னுக்குத்தள்ளி, உலகின் பணக்கார நாடாக மாறியுள்ளது சீனா. சீனாவின் தற்போதைய சொத்துமதிப்பு 120 இலட்சம் கோடி டொலராகும்.



உலகின் பொருளாதார வளம் நிறைந்த நாடுகளின் பட்டியலை மெக்கன்சி அண்ட்கோ நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் உலகின் மொத்த சொத்து மதிப்பு கடந்த 20 ஆண்டுகளில் மூன்று மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது.

உலகின் மொத்த சொத்து மதிப்பு 2000ஆம் ஆண்டு 156 இலட்சம் கோடி டொலராக இருந்தது. அது 2020ஆம் ஆண்டில் 514 இலட்சம் கோடி டொலராக உயர்ந்துள்ளது. இதில் மூன்றில் ஒருபங்கு வளர்ச்சிக்கு சீனா காரணமாக இருந்துள்ளது. இதன் மூலம் சீனாவின் சொத்து மதிப்பு ரொக்கெட் வேகத்தில் அதிகரித்துள்ளது.

உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்பினராக சீனா ஆவதற்கு முன்பு, 2000ஆம் ஆண்டில் அந்த நாட்டின் சொத்து மதிப்பு 7 இலட்சம் கோடி டொலராக இருந்தது. தற்போது சீனாவின் சொத்து மதிப்பு 120 இலட்சம் கோடி டொலராக உயர்ந்துள்ளது.

இதனால் உலக பணக்கார நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவைப் பின்னுக்கு தள்ளி சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. அமெரிக்காவின் சொத்துமதிப்பு 90 இலட்சம் கோடி டொலராக உள்ளது. (ம)

செயற்கைக்கோளை அழிக்கவல்ல ஏவுகணையை சோதித்தது ரஷ்யா

அமெரிக்கா கண்டனம்

மொஸ்கோ, நவ. 19

விண்வெளியில் வலம் வரும் செயற்கைக்கோள்களைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையை ரஷ்யா நேற்றுமுன்தினம் சோதித்தது. இந்த ஏவுகணைச் சோதனையில், ரஷ்யாவுக்குச் சொந்தமான செயற்கைக்கோள் ஒன்று வெடித்துச் சிதறியது. இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் கூறுகையில்;

'ரஷ்ய கூட்டமைப்பு பொறுப்பற்ற முறையில் அதன் சொந்த செயற்கைக்கோள்களில் ஒன்றுக்கு எதிராக, நேரடியாக தாக்கக்கூடிய செயற்கைக்கோள்களுக்கு எதிரான ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இந்தச் சோதனையானது, இதுவரை ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட கண்காணிக்கக்கூடிய சுற்றுப்பாதையில் பயணிக்கும் கழிவு பொருள்கள் மற்றும் இலட்சக்கணக்கான சிறிய சுற்றுப்பாதைக் குப்பைகளை உருவாக்கியுள்ளது, அவை இப்போது அனைத்து நாடுகளின் நலன்களையும் அச்சுறுத்துகின்றன' - என்றார். (ம)

காணி விற்பனைக்கு

பலாலி றோட் ஊரெழு மனோன்மணி அம்மன் கோவிலுக்கு 100M அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு. 1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: (CS 18070) 1-6

077 6585999, 077 5058 561

வாகனம் தேவை

மகேந்திரா பொலிரோ தேவை.
(தரகர்கள் தேவை இல்லை)

077 871 2347 (ad. 18101) (2.6)

வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும்
Lovely Flowers Center இற்கு
பெண் வேலையாட்கள் தேவை.

077 400 5023 (CS 18075) 1/6

காணி தேவை

கடற்கரையை அண்மித்ததாக சுமார் 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள உறுதிக்காணி (தரிசு நிலம் மாதிரி) தேவை. (தென்னைக்கோ அல்லது ஏனைய பயிர் செய்கைக்கோ ஏற்றதாக இருக்கவேண்டிய அவசியமில்லை)
தொடர்புகளுக்கு:

077 439 5848 (cs.41168) (2.6)

A/L வரலாறு

உங்கள் ஆசிரியர்
M.பத்மன் B.A(Hons),P.G.D.E,M.A (History).
ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
A/L-2022, A/L-2023 பிரிவுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
கற்பிக்கப்படும் இடங்கள் :
D.M.I உயர்கலைக் கல்லூரி BITSMANS
யாழ்ப்பாணம் குளப்பிட்டி மானிப்பாய்

(CS 41173)1-6

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.